சுராவின்

# சமூக அறிவியல்

## 10 ஆம் வகுப்பு

**புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது**

**சிறப்பம்சங்கள்**

☞ பாடநூலில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் முழுமையான, எளிமையான விடைகள் தரப்பட்டுள்ளன.

✦ விடைகள் விடைக்குறிப்பு (Key) அடிப்படையில் தரப்பட்டுள்ளன.

✦ முக்கியமான வினாக்கள் ※ குறியீடு இட்டு காட்டப்பட்டுள்ளன.

✦ முக்கியமான வார்த்தைகள் தடித்த எழுத்துக்களில் (Bold) காட்டப்பட்டுள்ளன.

☞ மெல்ல கற்கும் மாணவர்களுக்கான சிறப்பு விடைகள் தரப்பட்டுள்ளன.

☞ மாதிரி வினாத்தாள்கள் 1 முதல் 6 வரை (**PTA**) வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

☞ அரசு மாதிரி வினாத்தாள் 2019 [**Govt. MQP-'19**], காலாண்டுத் தேர்வு 2019, 2023 & 2024 [**QY-'19, '23 & '24**], அரையாண்டுத் தேர்வு 2019, 2023 & 2024 [**HY-'19, '23 & '24**], அரசு துணைத் தேர்வு செப்டம்பர் 2020 & 2021 [**Sep-2020 & '21**], முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வு 2022 [**FRT & SRT-'22**], அரசு பொதுத் தேர்வு மே 2022, ஏப்ரல் 2023, 2024 & 2025, [**May-'22, April-'23, '24 & '25**] மற்றும் உடனடித் தேர்வு ஆகஸ்ட் 2022, ஜூலை 2023 & 2024 [**Aug-'22, July-'23 & '24**] வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

☞ அலகுத் தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

☞ அரசு பொதுத்தேர்வு ஏப்ரல் - 2025 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

**For Orders Contact**
**80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 98409 26027**

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண். SG 331

**All rights reserved © SURA Publications.**
No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

**எழுதி வழங்கியவர்**

**திருமதி. ப. சுபத்ரா,** M.A., M.Ed., சென்னை
**திரு. அ. சண்முகம்,** M.A., B,Ed., நாமக்கல்
**திருமதி. த. அகிலாண்டேஸ்வரி,** M.A., M.Ed., சென்னை

**திருத்தியவர்**

**திரு. க. கண்ணப்பன்,** M.A., B.Ed., சென்னை

**மதிப்பாளர்**

**முனைவர். வ. வேல்முருகன்** M.A., M.Phil., Ph.D.,
துறைத்தலைவர், சேலம்

**Also available for Std - XI & XII**

Guides :
- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

# பதிப்பாசிரியர் உரை

10ஆம் வகுப்பிற்கான **சுராவின் சமூக அறிவியல் வழிகாட்டியை** வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி, பாடங்களை தெளிவாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்வதற்கு தேவைப்படும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி நமது வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு கற்பிக்க உறுதுணையாகவும், மாணவர்களுக்கு கற்க உறுதுணையாகவும் இந்த வழிகாட்டி இருக்கும் வகையில் வினாக்களுக்கான விடைகள் விளக்கமாகவும், எளிமையாகவும் தரப்பட்டுள்ளன.

பாடப்புத்தகத்தின் அனைத்து பாடங்களையும் திறமையுடன் கற்றுக் கொள்வதற்கு உதவும் வகையில் விரிவான கூடுதல் வினா விடைகள் அனைத்து பிரிவின் கீழும் தரப்பட்டுள்ளன.

நமது வழிகாட்டி பல சிறப்பம்சங்களை கொண்டிருப்பினும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதின் பாங்கினை குறைத்து மதிப்பிட முடியாது. அது நிறைந்த மதிப்புடையது.

மாணவச் செல்வங்களின் தேவைகளை நிறைவு செய்யவும், ஆசிரியப் பெருந்தகையினரின் கற்பிக்கும் பாங்கினை மேம்படுத்தவும் இந்த வழிகாட்டி பெரிதும் உதவும் என்று உறுதியுடன் நம்புகிறோம்.

மாணவமணிகள் தேர்வில் முழு வெற்றி பெற இறையருளை வேண்டுகிறோம்.

- **சுபாஷ் ராஜ்,** B.E., M.S.
பதிப்பகத்தார்
சுரா பப்ளிகேஷன்ஸ்

***வாழ்த்துக்கள் !!!***

**தலைமை அலுவலகம்**

**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**

**80562 94222**
**81242 01000**
**81243 01000**
**96001 75757**
**98409 26027**

09/05/2025

# பொருளடக்கம்

## வரலாறு


| | | |
|---|---|---|
| அலகு 1 | முதல் உலகப் போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் | 1-14 |
| அலகு 2 | இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம் | 15-28 |
| அலகு 3 | இரண்டாம் உலகப்போர் | 29-38 |
| அலகு 4 | இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் | 39-48 |
| அலகு 5 | 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 49-60 |
| அலகு 6 | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் | 61-72 |
| அலகு 7 | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் | 73-83 |
| அலகு 8 | தேசியம்: காந்திய காலகட்டம் | 84-96 |
| அலகு 9 | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் | 97-106 |
| அலகு 10 | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் | 107-118 |


## புவியியல்


| | | |
|---|---|---|
| அலகு 1 | இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு | 119-131 |
| அலகு 2 | இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் | 132-143 |
| அலகு 3 | இந்தியா - வேளாண்மை | 144-159 |
| அலகு 4 | இந்தியா - வளங்கள் மற்றும் தொழிலகங்கள் | 160-171 |
| அலகு 5 | இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் | 172-184 |
| அலகு 6 | தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள் | 185-197 |
| அலகு 7 | தமிழ்நாடு - மானுடப் புவியியல் | 198-210 |


## குடிமையியல்


| | | |
|---|---|---|
| அலகு 1 | இந்திய அரசியலமைப்பு | 211-220 |
| அலகு 2 | நடுவண் அரசு | 221-232 |
| அலகு 3 | மாநில அரசு | 233-244 |
| அலகு 4 | இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை | 245-254 |
| அலகு 5 | இந்தியாவின் சர்வதேச உறவுகள் | 255-266 |

## பொருளியல்


| | | |
|---|---|---|
| அலகு 1 | மொத்த உள்நாட்டு உற்பத்தி(GDP) மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம் | 267-280 |
| அலகு 2 | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் | 281-292 |
| அலகு 3 | உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து | 293-305 |
| அலகு 4 | அரசாங்கமும் வரிகளும் | 306-318 |
| அலகு 5 | தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் | 319-332 |
| அரசு பொதுத்தேர்வு ஏப்ரல் - 2025 வினாத்தாள் விடைகளுடன் | | 333-348 |


## பாடத்திட்டம்

| மாதம் | வரலாறு | புவியியல் | குடிமையியல் | பொருளியல் | மொத்த அலகுகள் |
|---|---|---|---|---|---|
| ஜுன் | 1 | 1, 2 | 1 | 1 | 5 |
| ஜுலை | 2, 3 | 3 | 2 | 2 | 5 |
| முதல் இடைத் தேர்வு (ஜுன், ஜுலை - 10 அலகுகள்) | | | | | |
| ஆகஸ்ட் | 4 | 4, 5 | 3 | 3 | 5 |
| ஆகஸ்ட் & செப்டம்பர் | 5 | 0 | 0 | 0 | 1 |
| காலாண்டுத் தேர்வு (ஜுன் - செப்டம்பர் - 16 அலகுகள்) | | | | | |
| அக்டோபர் | 6, 7 | 6 | 4 | 4 | 5 |
| நவம்பர் | 8, 9 | 7 | 5 | 5 | 5 |
| இரண்டாம் இடைத் தேர்வு (அக்டோபர், நவம்பர் - 10 அலகுகள்) | | | | | |
| நவம்பர் & டிசம்பர் | 10 | 0 | 0 | 0 | 1 |
| அரையாண்டுத் தேர்வு (மொத்த அலகுகள்) | | | | | |
| ஜனவரி | முதல் திருப்புதல் தேர்வு | | | | |
| பிப்ரவரி | இரண்டாம் திருப்புதல் தேர்வு | | | | |
| மார்ச் | மூன்றாம் திருப்புதல் தேர்வு | | | | |

# வரலாறு

## அலகு 1

# முதல் உலகப் போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்




## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தெரிவு செய்யவும்.

**1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?**

அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்

ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ரஷ்யா

இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி

ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி

**விடை : அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்**

---

**2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?** ※ [July-'23; April-'25]

அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா

**விடை: ஆ) ஜப்பான்**

---

**3. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?** ※※※※ [PTA-6; May-'22; July & HY-'24]

அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்

**விடை: அ) லெனின்**

---

**4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?** ※※※※ [FRT-'22; HY-'23; April-'24]

அ) ஆகாயப் போர்முறை ஆ) பதுங்குக் குழிப் போர்முறை

இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை

**விடை : ஆ) பதுங்குக் குழிப் போர்முறை**

---

**5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**விடை: அ) பிரிட்டன்**

---

**6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?** ※※ [Sep-'21; QY-'24]

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

**விடை: ஆ) ரஷ்யா**

---

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _______ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது. **விடை: 1894**
2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட _______ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது. ※ [May-'22] **விடை: இலண்டன்**
3. _______ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது. **விடை: 1902**
4. பால்கனில் _____ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது. **விடை: மாசிடோனியா**
5. டானென்பர்க் போரில் _______ பேரிழப்புகளுக்கு உள்ளானது. ※ [April-'23] **விடை: ரஷ்யா**
6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் _______ ஆவார். ※ [FRT-'22] **விடை: கிளமென்சோ**
7. _______ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. ※ [PTA–1; FRT & Aug-'22; QY-'23 & '24] **விடை: 1925**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. **i) துருக்கியப்பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.**
   **ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.**
   **iii) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.**
   அ) (i), (ii) ஆகியன சரி    ஆ) (i), (iii) ஆகியன சரி
   இ) (ii), (iii) ஆகியன சரி    ஈ) (i), (ii), (iii) ஆகியன சரி
   **விடை: ஈ) (i), (ii) (iii) ஆகியன சரி**

2. **கூற்று : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.**
   **காரணம் : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.**
   அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
   இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி ஆனால். கூற்று தவறு.
   **விடை: ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல**

## IV. பொருத்துக.

| | | | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கை | - | வெர்செய்ல்ஸ் | **ரஷ்யாவும் ஜெர்மனியும்** |
| 2. | ஜிங்கோயிசம் | - | துருக்கி | **இங்கிலாந்து** |
| 3. | கமால் பாட்சா | - | ரஷ்யாவும் ஜெர்மனியும் | **துருக்கி** |
| 4. | எம்டன் | - | இங்கிலாந்து | **சென்னை** |
| 5. | கண்ணாடி மாளிகை | - | சென்னை | **வெர்செய்ல்ஸ்** |

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. சீன – ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?** ※
**[FRT-'22; April-'25]**

(i) 1894-இல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை நடத்தியது.

(ii) இப்போரில் சிறிய நாடான **ஜப்பான் வெற்றிபெற்று உலகை வியக்க** வைத்தது.

(iii) தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி **ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.**

(iv) இதனால் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) 1894-இல் ஜப்பான் சீனாவின் மீது போர் தொடுத்தது.

(ii) சீன-ஜப்பானியப் போரில் சீனா தோற்கடிக்கப்பட்டது.

(iii) **லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் இணைத்து**, தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

---

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.** ※ ※ ※ ※ **[QY-'19 & '24; Aug-'22; July-'24]**

(i) இங்கிலாந்து, (ii) பிரான்ஸ் (iii) ரஷ்யா.

---

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?**
※ ※ ※ ※ **[HY-'19; FRT-'22]**

(i) இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று (Jingoism)

(ii) பிரான்சின் அதி தீவிரப்பற்று (Chauvinism)

(iii) ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று (Kultur)

---

**4. பதுங்குக் குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** ※ ※ ※ ※
**[PTA-3; Sep-'21; April-'23]**

**பதுங்குக் குழிப்போர் :**

(i) போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக் கொண்டு **பாதுகாப்பாக நிற்க** உதவின.

(ii) பிரதான பதுங்கு குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள **குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும்.**

(iii) அதன் வழியாக **உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள்** ஆகியவை வந்து சேரும், **புதிய வீரர்களும்** வந்து சேர்வர்.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) போர் வீரர்களால் தோண்டப்படும் பதுங்கு குழிகள் தங்களைக் காத்துக் கொண்டு **பாதுகாப்பாக நிற்க** உதவும்.

(ii) குழிகள் ஒன்றுடன் ஒன்று **இணைக்கப்பட்டிருக்கும்.**

(iii) **ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள்** வந்து சேரும்.

---

**5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?** ※ [FRT-'22]

(i) துருக்கி மீண்டும் ஒரு நாடாக **மறுபிறவி** எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா முக்கிய பங்கு வகித்தார்.

(ii) அவர் துருக்கிக்கு விடுதலை பெற்றுத் தந்ததோடு, அந்நாட்டை **நவீனமயமாக்கி அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.**

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) இவர் துருக்கியின் **மறுபிறவிக்கு** முக்கியப் பங்கு வகித்தார்.

(ii) இவர் துருக்கியை **நவீனமயமாக்கி மாற்றியமைத்தார்**.

**6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.** ※ [PTA-5]

(i) பன்னாட்டுச் சங்கம் **முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே** காணப்பட்டது.

(ii) சங்கத்திற்கென்று **இராணுவம் இல்லை** என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) சங்கத்திற்கென்று பொதுவான **இராணுவம் இல்லை.**

(ii) தேசியவாதத்தின் உள்ளார்ந்த **ஆற்றலை** உணரவில்லை.

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

**1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.** ※※※※
[PTA-1; HY-'19; Sep-2020 & 21; May-'22; QY-'23; April-'24]

**ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும் :**

(i) 1900-இல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், **இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.**

(ii) ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது.

(iii) இதற்கு எதிராக இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட **மூவர் கூட்டு நாடுகளாக** உருவாக்கப்பட்டது.

**வன்முறை சார்ந்த தேசியம் :**

(i) தேசப்பற்றின் வளர்ச்சியோடு "**எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்**" என்ற மனப்பாங்கும் வளர்ந்தது.

(ii) இங்கிலாந்தின் **ஆரவாரமான நாட்டுப்பற்று,** பிரான்சின் **அதி தீவிரப்பற்று,** ஜெர்மனியின் **வெறிகொண்ட நாட்டுப்பற்று.**

**ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு:**

(i) ஜெர்மன் பேரரசரான **இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன்** எனப் பிரகடனம் செய்தார்.

(ii) ஜெர்மனியின் **கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது.**

(iii) ஆகவே இங்கிலாந்தும் **கப்பற்படை விரிவாக்கப் போட்டியில்** இறங்கவே இரு நாடுகளுக்கிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது.

**பால்கன் போர்கள் :**

(i) முதல் பால்கன் போரில் **துருக்கி தோற்கடிக்கப்பட்டது.**

(ii) இலண்டன் உடன்படிக்கையின்படி **அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.**

(iii) மாசிடோனியாவைப் பிரித்தளித்ததில் **செர்பியாவையும் கிரீஸையும் பல்கேரியா தாக்கியது.**

(iv) இரண்டாம் பால்கன் போர் **புகாரெஸ்ட் உடன்படிக்கை** மூலம் முடிவுக்கு வந்தது.

**உடனடிக் காரணம் :**

(i) **பாஸ்னியாவிலுள்ள செராஜிவோ** என்னுமிடத்தில் 1914 ஜுன் 28-ம் நாள் ஆஸ்திரிய இளவரசர் **பிரான்ஸ் பெர்டினாண்டு பிரின்ஸப்** என்ற **பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.**

(ii) இதுவே முதல் உலகப் போருக்கு உடனடிக் காரணமாயிற்று.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

**ஐரோப்பிய அணி சேர்க்கைகளும், எதிர் அணி சேர்க்கைகளும் :** மூவர் உடன்படிக்கை, நட்புறவு ஒப்பந்தம் மற்றும் மூவர் கூட்டு.

**வன்முறை சார்ந்த தேசியம் :**

(i) ஆரவாரமான நாட்டுப்பற்று (ii) அதி தீவிரப்பற்று, (iii) வெறிகொண்ட நாட்டுப்பற்று

**பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு :** இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்றது.

**பால்கன் போர்கள் :**

(i) பால்கன் கழகம் - துருக்கி - முதல் பால்கன் போர்

(ii) புகாரெஸ்ட் உடன்படிக்கை - இரண்டாம் பால்கன் போர்.

**உடனடிக் காரணம் :** பிரான்ஸ் பெர்டினாண்டு கொலை செய்தல், பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாதல்.

---

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.** ※※※※ [PTA–2,6; FRT-'22; July-'23; April-'25]

(i) **போலந்து** மீண்டும் உருவாக்கப்பட்டது.

(ii) **அல்சேஸ்-லொரைன்** பகுதிகள் பிரான்சுக்குத் **திருப்பித் தரப்பட்டன.**

(iii) **ஆஸ்திரியா, ஜெர்மனி** ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.

(iv) **சிறிய கப்பற்படை** ஒன்றை மட்டுமே வைத்துக்கொள்ள ஜெர்மனி அனுமதிக்கப்பட்டது.

(v) ஜெர்மன் படை **1,00,000 வீரர்களை** மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது.

(vi) ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் **பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக** ஆக்கப்பட்டன.

(vii) போரைத் தொடங்கிய குற்றத்திற்காக **ஜெர்மனி இழப்பீடு வழங்க** வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

(viii) **பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கையையும் புகாரெஸ்ட் உடன்படிக்கையையும்** திரும்பப் பெற்றுக் கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) அல்சேஸ்-லொரைன் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

(ii) போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.

(iii) ஜெர்மனியின் காலனிகள் பாதுகாப்பு நாடுகளாக்கப்பட்டன.

(iv) ஆஸ்திரியா, ஜெர்மனி ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.

(v) ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை கொண்டதாக சுருக்கப்பட்டது.

**3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.**

(i) **காரல் மார்க்ஸின் சிந்தனைகளால்** கவரப்பட்ட லெனின் விடுதலைக்கான வழி பெருந்திரளான மக்களின் போராட்டமே என நம்பினார்.

(ii) பெரும்பாலானோரின் ஆதரவைப் பெற்ற லெனினும் அவரது ஆதரவாளர்களும் **போல்ஷ்விக் கட்சி** என்று அறியப்பட்டனர்.

**தற்காலிக அரசின் தோல்வி :**

(i) லெனின் "**அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே**" என்ற முழக்கம் தொழிலாளர்களையும் தலைவர்களையும் கவர்ந்தது.

(ii) மக்கள் "**ரொட்டி, அமைதி, நிலம்**" என்ற முழக்கத்தால் கவரப்பட்டனர்.

(iii) தற்காலிக அரசு இரண்டு முக்கியத் தவறுகளைச் செய்தது.

1. **நிலங்களின் மறுவிநியோகம்** குறித்த முடிவைத் தள்ளி வைத்தது.
2. போரைத் தொடர்வதென முடிவு செய்தது.

(iv) அரசு "**பிரவ்தா**" வை தடை செய்து போல்ஷ்விக்குகளைக் கைது செய்தது.

**லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுதல் :**

(i) அக்டோபர் திங்களில், லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக்குழுவை உடனடிப் புரட்சி குறித்து முடிவு செய்யக் கேட்டுக்கொண்டார்.

(ii) **டிராட்ஸ்கி** ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்தார்.

(iii) நவம்பர் 7-இல் **அரசுக் கட்டடங்கள், குளிர்கால அரண்மனை,** பிரதம மந்திரியின் தலைமை அலுவலகங்கள் புரட்சிப் படையினரால் கைப்பற்றப்பட்டன.

**புதிய கம்யூனிஸ்ட் அரசு :**

(i) **1917 நவம்பர் 8-இல்** ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது.

(ii) **போல்ஷ்விக் கட்சிக்கு** ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் **புதுப்பெயரிடப்பட்டது.**

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) லெனின் முழக்கம் "**அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே**"

(ii) **நிலங்களின் மறுவிநியோகம்** மீதான முடிவைத் தள்ளி வைத்தது.

(iii) அரசு "**பிரவ்தா**" வை தடை செய்து போல்ஷ்விக்குகளைக் கைது செய்தது.

(iv) போல்ஷ்விக் மத்தியக் குழு **உடனடிப் புரட்சியை** மேற்கொண்டது.

(v) **நவம்பர் 7-இல் டிராட்ஸ்கியின்** திட்டப்படி **அரசுக் கட்டடங்கள்** புரட்சியாளர்களால் கைப்பற்றப்பட்டன.

(vi) **நவம்பர் 8-இல்** லெனின் தலைமையில் புதிய கம்யூனிஸ்ட் அரசு பொறுப்பேற்றது.

---

**4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.** ※※※※ [HY-'19; April & QY-'24]

**சங்கத்தின் செயல்பாடுகள் :**

(i) **1920 - 1925** ஆகிய ஆண்டுகளிடையே **பன்னாட்டுச் சங்கம்** பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க **அழைக்கப்பட்டது.**

(ii) மூன்று பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் சங்கம் வெற்றி பெற்றது.

**ஆலேண்டு தீவுகள் பிரச்சனை :**

(i) **1920-இல் பின்லாந்திற்கும் சுவீடனிற்கும்** இடையில் அமைந்திருக்கும் **ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம்** என்பதில் பிரச்சனை ஏற்பட்டது.

(ii) பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் **பின்லாந்திற்கே உரியது** என தீர்ப்பளித்தது.

**மேலை சைலேஷியன் பிரச்சனை :**

(i) **1921-ல் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலேஷியா** பகுதியில் **எல்லைப் பிரச்சினை** ஏற்பட்டது.

(ii) அப்பிரச்சனையை சங்கம் **வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.**

**கிரீஸ், பல்கேரியா பிரச்சனை :**

(i) **கிரீஸ், பல்கேரியாவின்** மீது **படையெடுத்த போது** பன்னாட்டுச் சங்கம் **போர் நிறுத்தம்** செய்ய உத்தரவிட்டது.

(ii) விசாரணைக்குப் பின் சங்கம் கிரீஸின் மீது குற்றஞ்சாட்டி, **கிரீஸ் போர் இழப்பீடு** வழங்க வேண்டுமெனத் தீர்மானித்தது.

(iii) **1925-இல் லொக்கர்னோ உடன்படிக்கை** கையெழுத்தாகின்றவரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) 1920 - 1925க்கு இடையில் பன்னாட்டுச் சங்கம் மூன்று பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் வெற்றி பெற்றது.

- ♦ பின்லாந்துக்கும் சுவீடனுக்குமிடையே ஆலேண்டு தீவுகள் பிரச்சனையைத் தீர்த்தது.
- ♦ **போலந்திற்கும் ஜெர்மனிக்கும்** இடையே **மேலை சைலேஷியா** பிரச்சனையைத் தீர்த்தது.
- ♦ **கிரீஸ், பல்கேரியா** பிரச்சனையைத் தீர்த்தது.

(ii) **1925-இல் லொக்கர்னோ உடன்படிக்கையில்** கையெழுத்திட்டது.

## VII. செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. **முதல் உலகப்போரில் ஈடுபட்ட நாடுகளின் தலைநகரங்களையும் போர்க்களங்களையும் வரைபடத்தில் குறிப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.**

## VIII. வரைப்படப் பணி

**உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும். ※※※※**

[PTA-1; QY-'19, '23 & '24; HY-'23; April-'24 & '25; July-'24]

| | | | |
|---|---|---|---|
| 1. கிரேட் பிரிட்டன் | 2. ஜெர்மனி | 3. பிரான்ஸ் | 4. இத்தாலி |
| 5. மொராக்கோ | 6. துருக்கி | 7. செர்பியா | 8. பாஸ்னியா |
| 9. கிரீஸ் | 10. ஆஸ்திரிய - ஹங்கேரி | 11. பல்கேரியா | 12. ருமேனியா |

**(வரைபட பயிற்சி புத்தகத்தைப் பார்க்கவும்)**

## PTA மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### 1 மதிப்பெண்

1. **ஜூட்லேண்டு போரில் வெற்றி பெற்ற நாடு.** ※ [QY-'19]

அ) ஜெர்மனி ஆ) இங்கிலாந்து இ) ரஷ்யா ஈ) பிரான்ஸ்

**விடை: ஆ) இங்கிலாந்து**

**2. எத்தியோப்பியாவின் படைகள் இத்தாலியின் படைகளை எவ்விடத்தில் தோற்கடித்தது?** ※ [Sep-2020]

அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ்

**விடை: இ) அடோவா**

## 2 மதிப்பெண்கள்

**1. ரஷ்யப் புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக.** ※ [Sep-2020]

(i) பல நாடுகளில் **கம்யூனிஸ்ட் கட்சிகள்** உருவாக்கப்பட்டன.

(ii) ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை **விடுதலைக்காகப் போராட ஊக்குவித்து** அவர்களுக்கு முழுமையாக ஆதரவையும் நல்கியது.

(iii) **நிலச்சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம்** போன்ற இன்றியமையாதவை குறித்த விவாதங்கள் உலகஅளவில் நடைபெறத் தொடங்கின.

## 5 மதிப்பெண்கள்

**1. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக.** ※ [PTA-4]

**பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் :**

(i) பன்னாட்டு சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.

(ii) சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.

(iii) அமைதிக்கான இவ்வமைப்பை உருவாக்கியவர்கள் **தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை.**

(iv) 'கூட்டுப்பாதுகாப்பு' எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை.

(v) சர்வாதிகாரிகளால் தலைமையேற்கப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட மறுத்தபோது, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மட்டுமே உறுதியாகச் செயல்படும் நிலையிலிருந்தன.

**2. முதல் உலகப் போர் இந்தியாவின் மீது ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி விவரிக்கவும்.** ※ [FRT-'22]

(i) முதல் உலகப்போர் இந்தியாவின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா ஆகிய பகுதிகளில் போர்ப்பணி செய்வதற்காக ஆங்கிலேயர் இந்தியர்களைக் கொண்ட பெரும்படையைத் திரட்டினர். போர் முடிந்த பின்னர் இவ்வீரர்கள் **புதிய சிந்தனைகளோடு** தயாகம் திரும்பினர்.

(ii) அச்சிந்தனைகள் இந்திய சமூகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தின.

(iii) போர் செலவுக்காக இந்தியா **230 மில்லியன்** பவுண்டுகளை **ரொக்கமாகவும், 125 மில்லியன்** பவுண்டுகளைக் **கடனாகவும்** வழங்கியது. மேலும் 250 மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள போர்முனைக்குத் தேவையான பொருள்களையும் இந்தியா அனுப்பி வைத்தது.

(iv) இதன் விளைவாக இந்தியாவில் பெருமளவிலான **பொருளாதார இன்னல்கள்** ஏற்பட்டன. உணவுதானியப் பற்றாக்குறையால் கலவரங்கள் ஏற்பட்டு **ஏழைமக்கள் கடைகளைக்** கொள்ளையடித்தனர்.

(v) போர் முடிவடையுந்த தருவாயில் உலகம் முழுதும் பரவிய விஷக்காய்ச்சலால் இந்தியாவும் பெருந்துயருக்குள்ளானது.

(vi) போர்நிலைமைகள் இந்திய அரசியலில் தன்னாட்சி இயக்கம் உதயமாக வழிகோலியது. பிளவுபட்டிருந்த காங்கிரஸ் இயக்கம் போரின் போது மீண்டும் இணைந்தது.

(vii) இங்கிலாந்து இந்தியாவின் விசுவாசத்தைப் பாராட்டிப் பரிசளிக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தியர்களும் இந்தியாவும் இப்போரில் செயலூக்கத்துடன் பங்கேற்றனர். ஆனால் ஏமாற்றமே காத்திருந்தது.

(viii) இவ்வாறு முதல் உலகப்போர் **இந்தியச் சமூகம், பொருளாதாரம், அரசியல்** ஆகியவற்றின் மேல் பல தாக்கங்களை ஏற்படுத்தியது.

**3. பன்னாட்டு சங்கத்தின் குறிக்கோள்கள் யாவை?** ※ [FRT-'22]

(i) பன்னாட்டுச் சங்கத்தின் இரண்டு குறிக்கோள்களில் ஒன்று **போர்களைத் தவிர்த்து** உலகில் **அமைதியை நிலைநாட்டுவது** மற்றொன்று சமூகப் பொருளாதார விசயங்களில் **பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவது** என்பனவாகும்.

(ii) பன்னாட்டுச் சங்கம் **நடுவராகவும், சமாதானம் செய்பவராகவும்** இருந்து அதன் மூலம் பிரச்சனைகளைத் தொடக்கத்திலேயே தீர்த்து வைக்க விரும்பியது.

(iii) நடுவர் தீர்ப்பையும் மீறி போர்கள் வெடித்தால் போருக்குக் காரணமான நாட்டின் மீது சங்கம் முதலில் பொருளாதாரத் தடைகளையும் பின்னர் ராணுவ ரீதியிலானத் தடைகளையும் விதிக்க வேண்டும்.

(iv) அமெரிக்கா (சங்கத்தில் உறுப்பினராகாத நாடு), ஜெர்மனி (தோல்வியுற்ற நாடு), ரஷ்யா ஆகிய மூன்று வல்லரசுகள் இவ்வமைப்பில் அங்கம் வகிக்காததால், இக்குறிக்கோள்களை எட்டுவதில் சிரமங்கள் மேலும் அதிகரித்தன.

(v) ஜெர்மனியும் ரஷ்யாவும் முறையே 1926, 1934 ஆகிய ஆண்டுகளில் சங்கத்தில் சேர்ந்தன. 1933இல் ஜெர்மனி விலகியது. 1939இல் ரஷ்யா வெளியேற்றப்பட்டது.

## 8 மதிப்பெண்கள்

**1. குறிப்பு வரைக :** (i) **கூட்டு நிறுவனம்** (ii) **மார்ன் போர்** (iii) **வெர்டன் போர்** (iv) **பாரிஸ் அமைதி மாநாடு** ※ [FRT-'22]

(i) **கூட்டு நிறுவனம் :** கூட்டு நிறுவனம் என்பது பொருள்களை உற்பத்தி செய்து விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு **தொழில்சார் நிறுவனமாகும்**. தனக்கு நன்மை பயக்கும் விதத்தில் பொருள்களின் விநியோகம், விலை ஆகியவற்றின் மீது அந்நிறுவனம் அதிகக் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும்.

(ii) **மார்ன் போர் : டானென்பர்க் போரில்** ஜெர்மனியிடம் ரஷ்யா பேரிழப்புகளைச் சந்தித்தது. இருந்த போதிலும் மார்ன்போரில் (1914 செப்டம்பர் தொடக்கத்தில்) பிரெஞ்சுப் படைகள் ஜெர்மானியரை வெற்றி பெற்றன. இப்படியாகப் பாரிஸ் காப்பாற்றப்பட்டது. **மார்ன் போரானது பதுங்குக் குழிப்போரின் தொடக்கமாகும்.**

(iii) **வெர்டன் போர் :** 1916 ஆம் ஆண்டு பிப்ரவரிக்கும் **ஜூலைக்குமிடையே ஜெர்மானியர்** பிரான்சின் முக்கியக் கோட்டையான வெர்டனைத் தாக்கினர். ஐந்துமாத காலம் நடைபெற்ற வெர்டன் போரில் இரண்டு மில்லியன் வீரர்கள் பங்கெடுத்தனர். நான்குமாத காலம் நடைபெற்ற போரின் முதல்நாளில் இங்கிலாந்து **20,000 வீரர்களை** இழந்தது. இருந்தபோதிலும் வெர்டன்போர் முதல் உலகப்போரில் நேசநாடுகளே வெற்றி பெறும் என்பதைத் தீர்மானித்தது.

(iv) **பாரிஸ் அமைதி மாநாடு :** பாரிஸ் அமைதி மாநாடு, போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான இரண்டு மாதங்களுக்குப் பின்னர் **1919 ஜனவரி** திங்களில் தொடங்கியது. **உட்ரோ வில்சன்** (அமெரிக்க அதிபர்), லாயிட் ஜார்ஜ் (இங்கிலாந்துப் பிரதமர்), கிளமென்சோ (பிரான்சின் பிரதமர்) ஆகிய மூவரும் கலந்தாய்வில் முக்கியப் பங்குவகித்தனர். 1919 ஜூன் 28ஆம் நாள் அமைதி உடன்படிக்கை வெர்செய்ல்ஸ் கண்ணாடி மாளிகையில் கையெழுத்திடப்பட்டது.

**2. முதல் உலகப் போரின் விளைவுகள் யாவை?** ※ [FRT-'22]

(i) முதல் உலகப்போர், ஐரோப்பிய சமூக மற்றும் அரசியல் ஆகியவற்றின் மீது **ஆழமான தாக்கத்தை** ஏற்படுத்தியது.

(ii) **கட்டாய இராணுவசேவை** மூலமாகவும், **வான்வழித்தாக்குதல்கள்** மூலமாகவும் கடந்தகாலங்களைக் காட்டிலும் அதிகமான மக்களைப் போரில் பங்கேற்கச் செய்து அதிகமான பாதிப்புகளையும் ஏற்படுத்தியது.

(iii) நான்கு ஆண்டுகளில் **8 மில்லியன் மக்கள் மாண்டனர்**. அதைப் போன்று இரண்டு மடங்கு மக்கள் காயமடைந்தனர்.

(iv) இதனைத் தொடர்ந்து 1918இல் இன்ஃப்ளூயன்ஸா நோயில் பல மில்லியன் மக்கள் மாண்டனர்.

(v) போர்வீரர்கள் பொதுமக்களைக் காட்டிலும் உயரிய நிலையில் வைக்கப்பட்டனர்.

(vi) **U.S.S.R** அல்லது **ஐக்கிய சோசலிஸ்ட்** சோவியத் குடியரசுகள் என்றழைக்கப்பட்ட சோவியத் ரஷ்யாவின் எழுச்சியும் அதன் ஒருங்கிணைப்புமாகும். கடன்பட்ட ஒரு நாடாகப் போரில் நுழைந்த அமெரிக்கா போருக்குப் பின்னர் உலகத்திற்கே கடன் கொடுக்கும் நாடாக மேலெழுந்தது.

(vii) இக்காலகட்டத்தின் மற்றொரு முதன்மையான நிகழ்வு **காலனி நாடுகளின் முழுமையான விழிப்புணர்வும், விடுதலை பெறுவதற்காக** அவை மேற்கொண்ட தீவிர முயற்சிகளுமாகும்.

---

**3. பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகள் பற்றி விவரிக்கவும்.** ※ [May-'22]

**அமைப்பும் உறுப்புகளும் :**

(i) பன்னாட்டுச் சங்கத்திற்கான **கூட்டு ஒப்பந்த ஆவணம்** பாரிஸ் அமைதி மாநாட்டில் தயார் செய்யப்பட்டது.

(ii) **1920 இல்** துவக்கப்பட்ட இச்சங்கம் **ஐந்து உறுப்புகளைக்** கொண்டிருந்தது. அவை **பொதுச்சபை, செயற் குழு, செயலகம், பன்னாட்டு நீதிமன்றம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு** என்பனவாகும். செயற்குழுவே முடிவுகளைச் செயல்படுத்தும் அமைப்பாகும்.

(iii) **பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா** ஆகிய நாடுகளே தொடக்கத்தில் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்கள் என அறிவிக்கப்பட்டது.

(iv) ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு அளிக்கும் உரிமை உண்டு. மேலும் அனைத்து முடிவுகளும் ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதால் சிறு நாடுகளும் மறுப்பாணை அதிகாரத்தைப் பெற்றிருந்தன.

(v) பன்னாட்டுச் சங்கத்தின் செயலகம் **ஜெனீவாவில்** அமைந்து இருந்தது. அதன் முதல் பொதுச் செயலாளர் பிரிட்டனைச் சேர்ந்த **சர் எரிக் டிரம்மாண்ட்** ஆவார்.

(vi) பன்னாட்டு நீதிமன்றமானது **தி ஹேக் நகரில்** அமைக்கப்பட்டது.

(vii) பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, ஒரு செயலகத்தையும் அதன் பொது மாநாட்டில் ஒவ்வொரு உறுப்பு நாட்டிலிருந்தும் நான்கு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

---

**4. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.**

**பால்கன் போர்கள் :** ※ ※ [GMQP & QY-'19]

**அ) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?**

**ஆ) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை?**

**இ) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?**

**ஈ) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?**

**விடைகள் :**

**அ)** மாசிடோனியாவைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் கிரீஸ், செரீபியா, பல்கேரியா பின்னர், மாண்ட் நீக்ரோ ஆகிய நாடுகள் இடையே போட்டிகள் நிலவின. 1912 ஆம்

ஆண்டு மார்ச் திங்களில் அவை பால்கன் கழகம் என்ற அமைப்பை உருவாக்கின.

**ஆ)** (i) 1913 ஆம் ஆண்டு மே மாதம் லண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது. மாசிடோனியாவை ஏனைய பால்கன் நாடுகள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன.

(ii) துருக்கி, கான்ஸ்டாண்டிநோபிளைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டும் கொண்ட அரசாகச் சுருக்கப்பட்டது.

**இ)** துருக்கியப் படைகள்.

**ஈ)** 1913 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் கையெழுத்திடப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கை.

**5. கீழ்கண்ட தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.** ※ [July-'23]

**முதல் உலகப் போர் :**

(i) **முதல் உலகப் போர் எப்பொழுது துவங்கியது?**

(ii) **மைய நாடுகள் என அழைக்கப்பட்ட நாடுகள் எவை?**

(iii) **முதல் உலகப் போரில் அமெரிக்கா எந்த ஆண்டு இறங்கியது?**

(iv) **ஜெர்மனியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பெயர் என்ன?**

**விடைகள் :**

(i) 1914

(ii) ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகள் மையநாடுகள் என அழைக்கப்பட்டன.

(iii) 1917

(iv) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. முதல் உலகப் போரின் மாபெரும் விளைவு ________. **விடை: ரஷ்யப் புரட்சி**

2. ________ போரில் பிரெஞ்சுப் படைகள் ஜெர்மானியரை வெற்றிப்பெற்றன. **விடை : மார்ன்**

3. கிழக்கு முனை __________ படைகள் ஆஸ்திரியப் படைகளை மீண்டும் மீண்டும் தோற்கடித்தன. **விடை : ரஷ்ய**

4. ரஷ்யாவும் __________ ம் பிரேஸ்ட் - லிட்டோவஸ்க் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. **விடை : ஜெர்மனி**

5. __________ சூயஸ் கால்வாயைத் தாக்க முயன்றனர். **விடை : துருக்கியர்**

6. _________ 1916 மே திங்களில் நேசநாடுகள் அணியில் இணைந்தது. **விடை : இத்தாலி**

7. பாரிஸ் அமைதி நாடு நடைபெற்ற ஆண்டு __________. **விடை : 1919**

8. ஜெர்மனி 1919 ஆம் ஆண்டு ஜுன் 28 ஆம் நாள் _______________ உடன்படிக்கையில் வெர்சேல்ஸ் கண்ணாடி மாளிகையில் கையெழுத்திடப்பட்டது. **விடை : அமைதி**

9. ரஷ்யாவில் ஆட்சியைப் கைப்பற்றிய ________ கம்யூனிச அரசை நிறுவினார். **விடை : லெனின்**

10. _____ இல் சார் இரண்டாம் அலெக்ஸாண்டர் பண்ணை அடிமை முறையை ஒழித்து அவர்களை மீட்டார். **விடை : 1861**

11. ஜெர்மனி இங்கிலாந்தின் மீது ___________ தாக்குதலை மேற்கொண்டது. **விடை : வான்வழித்**

12. ______ விஷ வாயுவை அறிமுகம் செய்தது. **விடை : ஜெர்மனி**

13. 1916 ஆம் ஆண்டு வடகடலில் _______ போர் நடைப் பெற்றது. **விடை : கப்பற்படை (ஜுட்லேண்டு போர்)**

14. அமெரிக்க குடியரசுத் தலைவர் _______ ஜெர்மனிக்கு எதிராக 1917 ஆம் ஆண்டு போர் பிரகடனம் செய்தார். **விடை : உட்ரோ வில்சன்**

15. ஜெர்மனிய அரசரின் பெயர் _______. **விடை : கெய்சர் வில்லியம்**

16. ஜெர்மனி பல்கேரியாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை _______. **விடை : புகாரெஸ்ட் உடன்படிக்கை**

17. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை செனட்சபை ஏற்றுக் கொள்ள மறுத்ததைத் தொடர்ந்து அமெரிக்கா ________ பின்பற்றத் தொடங்கியது. **விடை : தனித்திருக்கும் கொள்கையை**

18. முதல் உலகப்போரின் மாபெரும் விளைவு _______ ஆகும். **விடை : இரஷ்யா**

19. ரஷ்யாவின் போல்ஷ்விக் கட்சிக்கு _______ என்று புதுப் பெயரிட்டது. **விடை : ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி**

20. பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கை கையெழுத்திட்ட ஆண்டு _______. **விடை : 1918**

**21.** கொரியா ஜப்பானுடன் _______ ஆம் ஆண்டு இணைத்துக் கொள்ளப்பட்டது. **விடை : 1910**

**22.** ஜெர்மனியே உலகத்தின் தலைவன் என ________ பிரகடனம் செய்தார்.
**விடை : இரண்டாம் கெய்சர் வில்லியம்**

**23.** முதல் பால்கன் போரில் __________ நாடு தோல்வியைத் தழுவியது. **விடை : துருக்கி**

**24.** லண்டன் உடன்படிக்கையின் படி ________ புதிய நாடாக உருவாக்கப்பட்டது.
**விடை : அல்பேனியா**

**25.** மார்ன் போரில் பிரெஞ்சுப் படை ________ யை வெற்றி கண்டது. **விடை : ஜெர்மனி**

**26.** ஜெர்மனால் தாக்கப்பட்ட பிரான்சின் முக்கியக் கோட்டை ______. **விடை : வெர்டன்**

**27.** கிழக்கு முனைப்போரில் ரஷ்யாவிடம் ________ நாடு தொடர்ந்து தோல்வியுற்றது.
**விடை : ஆஸ்திரியா**

**28.** சென்னை மீது குண்டுகளை _______ என்ற புகழ்பெற்ற கப்பல் வீசியது. **விடை : எம்டன்**

**29.** ______ சபை வெர்செயில்ஸ் உடன்படிக்கையை ஏற்க மறுத்தது.
**விடை : செனட்**

**30.** சார் நிக்கோலஸ் ____________ என்ற நாடாளுமன்றத்தை நிறுவினார். **விடை : டூமா**

## II. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

**1.** **i) முதலாளித்துவத்தின் உச்சக்கட்டமே ஏகாதிபத்தியமாகும்.**
**ii) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு சந்தைகள் மட்டும் அல்லாமல், கச்சாப் பொருட்களும் தேவைப்பட்டன.**
**iii) ஏகாதிபத்தியம் ஒரு முழுமையான முறையாக மாறியதற்கு ராணுவ மயமாக்கல் மற்றும் முழுமையான போர் காரணமில்லை.**
**iv) பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பிய சக்திகள் பெரிய சிறிய நாடுகளைக் காலனிப்படுத்தி தங்களின் நலனுக்காக அவற்றை சுரண்டின.**

அ) (ii) மற்றும் (iii) சரியானவை ஆ) (i) மற்றும் (ii) சரியானவை
இ) (i) மற்றும் (iv) சரியானவை ஈ) (ii) மற்றும் (iv) சரியானவை

**விடை : ஆ) (i) மற்றும் (ii) சரியானவை**

**2.** **கூற்று** : உலக வரலாற்றில் 1914 ஆம் ஆண்டு ஒரு திருப்புமுனையாகும்.
**காரணம்** : 1789 ஆம் ஆண்டில் தொடங்கிய அரசியல் சமூக செயல்பாடுகள், 1914 இல் வெடித்த முதல் உலகப் போரின் உச்சத்தை அடைந்து இருபதாம் நூற்றாண்டினுடைய போக்கின் வடிவத்தை தீர்மானித்தன.

அ) கூற்றும் காரணமும் சரி. ஆ) கூற்றுசரிகாரணம்கூற்றுக்கானசரியானவிளக்கமல்ல
இ) கூற்றும் காரணமும் தவறு ஈ) கூற்று தவறு காரணம் சரி

**விடை : அ) கூற்றும் காரணமும் சரி**

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | லாயிட் ஜார்ஜ் | அ) | பிரான்ஸின் பிரதமர் |
| 2. | உட்ரோ வில்சன் | ஆ) | 1919 |
| 3. | கிளெமென்சோ | இ) | அமெரிக்க அதிபர் |
| 4. | ஜெர்மன் படை | ஈ) | இங்கிலாந்து பிரதமர் |
| 5. | பாரிஸ் அமைதி மாநாடு | உ) | 1,00,000 வீரர்கள் |

**விடை : 1. ஈ, 2. இ, 3. அ, 4. உ, 5. ஆ**

## IV. கீழ்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி. 2 மதிப்பெண்கள்

**1.** **முதல் உலகப் போரின் பொதுவான விளைவுகளை எழுதுக.**

(i) அனைத்து நாடுகளிலும் **ஆண் - பெண்** எண்ணிக்கையில் **சமநிலை** குலைந்து **ஆண்களுக்குப் பற்றாக்குறை** ஏற்பட்டது.

(ii) **போர் வீரர்கள்** பொதுமக்களைக் காட்டிலும் **உயரிய நிலையில்** வைக்கப்பட்டனர்.

**2. போர் செலவுக்காக இந்தியாவின் பங்களிப்பைக் குறிப்பிடுக.**

(i) போர் செலவுக்காக இந்தியா **230 மில்லியன்** பவுண்டுகளை **ரொக்கமாகவும், 125 மில்லியன்** பவுண்டுகளைக் **கடனாகவும்** வழங்கியது.

(ii) மேலும் **250 மில்லியன்** பவுண்டுகள் மதிப்புள்ள **போர்முனைக்குத் தேவையான பொருள்களையும்** இந்தியா அனுப்பிவைத்தது.

**3. ரஷ்யப் புரட்சியின் விளைவுகள் யாவை?**

(i) ரஷ்யாவின் **எழுத்தறிவின்மையும் வறுமையும்** ஒழிக்கப்பட்டது.

(ii) ரஷ்யாவின் **தொழில்துறையும் வேளாண்மையும் உன்னதமான வளர்ச்சியைப்** பெற்றன.

(iii) வாக்குரிமை முதலாகப் **பெண்களுக்கு சமஉரிமை** வழங்கப்பட்டது.

(iv) தொழிற்சாலைகளும் வங்கிகளும் **தேசியமயமாக்கப்பட்டன.**

**4. இருபதாம் நூற்றாண்டை வரலாற்று ஆசிரியர்கள் ஏன் நீண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு என்று அழைத்தனர்??**

(i) உலக வரலாற்றில் கி.பி.(பொ.ஆ) **1914 ம்** ஆண்டு **ஒரு திருப்பு முனையாகும்.** 1789 ஆம் ஆண்டில் தொடங்கிய **அரசியல் சமூக செயல்பாடுகள்,** 1914 இல் வெடித்த முதல் உலகப்போரில் **உச்சத்தை அடைந்து** இருபதாம் நூற்றாண்டினுடைய போக்கையே தீர்மானித்தன.

(ii) ஆகையால் வரலாற்றாசிரியர்கள் இதனை **நீண்ட பத்தொன்பதாம்** நூற்றாண்டு என அழைத்தனர்.

## V. விரிவான விடையளி. 5 மதிப்பெண்கள்

**1. பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகள் பற்றி விவரிக்கவும்.**

(i) பன்னாட்டு சங்கத்திற்கான **கூட்டு ஒப்பந்த ஆவணம்** பாரிஸ் மாநாட்டில் தயார் செய்யப்பட்டது.

(ii) இச்சங்கம் **1920-ல்** தொடங்கப்பட்டது.

(iii) இச்சங்கம் தோற்றுவிப்பதில் **உட்ரோ வில்சன்** முக்கியப் பங்குவகித்தார்.

(iv) **பொதுசபை, செயற்குழு, செயலகம், பன்னாட்டு நீதிமன்றம்** மற்றும் **பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு** ஆகியவை இதன் **ஐந்து** உறுப்புகளாகும்.

**பொதுச் சபை :** பொதுச் சபையில் ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

**செயற்குழு :**

(i) செயற்குழுவே **முடிவுகளைச் செயல்படுத்தும்** அமைப்பு ஆகும்.

(ii) **பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா** ஆகிய நாடுகள் இச்சபையின் தொடக்கக்கால **நிரந்தர உறுப்பினர்களாகும்.**

(iii) ஒவ்வொரு உறுப்பினருக்கும் **ஒருவாக்கு அளிக்கும் உரிமை உண்டு.**

(iv) அனைத்து முடிவுகளும் **ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட வேண்டும்.**

**செயலகம் :**

(i) பன்னாட்டுச் சங்கத்தின் செயலகம் **ஜெனிவாவில்** அமைந்து இருந்தது.

(ii) செயலகப் பணியாளர்களை **பொதுச் செயலாளர்** பணியமர்த்துவார்.

**பன்னாட்டு நீதிமன்றம் :** இந்நீதிமன்றம் **திஹேக்** நகரில் அமைக்கப்பட்டிருந்தது. இது **பதினைந்து நீதிபதிகளைக்** கொண்டது.

**பன்னாட்டுதொழிலாளர் அமைப்பு:** இவ்வமைப்பு ஒரு செயலகத்தையும் அதன் பொது மாநாடு ஒவ்வொரு உறுப்பு நாட்டிலிருந்தும் **நான்கு உறுப்பினர்களைக்** கொண்டிருந்தது.

# அலகுத் தேர்வு

**காலம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள்: 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

**1. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?**

அ) ஆகாயப் போர்முறை ஆ) பதுங்குக் குழி போர்முறை

இ) நீர்முழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை

**2. எத்தியோப்பியாவின் படைகள் இத்தாலியின் படைகளை எவ்விடத்தில் தோற்கடித்தது?**

அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ்

**3. ஜூட்லேண்டு போரில் வெற்றி பெற்ற நாடு.**

அ) ஜெர்மனி ஆ) இங்கிலாந்து இ) ரஷ்யா ஈ) பிரான்ஸ்

**4. எத்தியோப்பியாவின் படைகள் இத்தாலியின் படைகளை எவ்விடத்தில் தோற்கடித்தது?**

அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

5. ____________ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.

6. டானென்பர்க் போரில் ______ பேரிழப்புகளுக்கு உள்ளானது.

7. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட _____ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

**III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.** (1× 1 = 1)

8. **கூற்று : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.**

**காரணம் : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.**

அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.

ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு. ஈ) காரணம் சரி ஆனால். கூற்று தவறு.

**IV. பொருத்துக** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 9. | பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கை | - | அ) துருக்கி |
| 10. | கமால் பாட்ஷா | - | ஆ) ரஷ்யாவும் ஜெர்மனியும் |
| 11. | எம்டன் | - | இ) வெர்செய்ல்ஸ் |
| 12. | கண்ணாடி மாளிகை | - | ஈ) சென்னை |

**V. சுருக்கமாக விடையளிக்கவும்.** (4 × 2 = 8)

13. பதுங்குக் குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிவதென்ன?

14. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

15. முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன?

16. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?

**VI. விரிவான விடையளிக்கவும்.** (1 × 5 = 5)

17. பன்னாட்டு சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகள் பற்றி விவரிக்கவும்.

## அலகு 2

# இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்




### பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

**1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?** ※※※ [GMQP, QY & HY-'19; April-'25]

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின் **விடை : இ) போப்**

**2. யாருடைய ஆக்கிரமிப்பின்போது மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?**

அ) ஹெர்மன் கோர்ட்ஸ் ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ

இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர் ஈ) முதலாம் பெட்ரோ **விடை : அ) ஹெர்மன் கோர்ட்ஸ்**

**3. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டனர்?**

அ) ஆங்கிலேயர் ஆ) ஸ்பானியர் இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர்

**விடை : ஆ) ஸ்பானியர்**

**4. லத்தீன் அமெரிக்காவுடன் 'அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?** ※ [QY-'24]

அ) பிராங்க்ளின் D.ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன்

இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர் **விடை: அ) பிராங்க்ளின் D.ரூஸ்வெல்ட்**

**5. உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?**

※※※ [PTA–2; April & QY-'23]

அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா

இ) இந்தியா ஈ) சீனா **விடை : ஆ) லத்தீன் அமெரிக்கா**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் ________. **விடை: பெர்டினன்ட் லாஸ்ஸல்லி**

2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் ______. **விடை: ஜோசப் கோயபெல்ஸ்**

3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி ________ இல் நிறுவப்பட்டது. **விடை: 1927**

4. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை ________ என அழைக்கப்பட்டது. ※※※ [QY-'19 & '23; April-'24] **விடை: கெஸ்டபோ**

5. தென்னாப்பிரிக்க ஒன்றியம் ________ ஆம் ஆண்டு மே மாதம் உருவானது. ※ [HY-'19] **விடை: 1910**

6. ஆப்ரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா ________ ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். **விடை: 27**

7. போயர்கள் ______ என்றும் அழைக்கப்பட்டனர். **விடை: ஆப்பிரிக்கநேர்கள் (ஆப்ரிகானர்கள்)**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. **i) முதல் உலகப்போரில் இத்தாலியின் முதன்மையான சவாலான பணி ஆஸ்திரியர்களை தெற்குமுனையில் நிறுத்தி வைப்பதாகும்.** ※ [PTA–1]

**ii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச்சந்தை வீழ்ச்சி 1929 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாளில் ஏற்பட்டது.**

**iii) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966 இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.**

அ) (i), (ii) ஆகியவை சரி ஆ) (iii) சரி

இ) (ii), (iii) ஆகியவை சரி ஈ) (i), (ii), (iii) ஆகியவை சரி

**விடை: அ) (i), (ii) ஆகியவை சரி**

2. **கூற்று : 1884-85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.**

**காரணம் : ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.**

அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.

ஆ) கூற்று சரி. ஆனால், காரணம் சரியான விளக்கமல்ல.

இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

ஈ) கூற்று தவறு. ஆனால், காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை.

**விடை: அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி**

## IV. பொருத்துக.

| | | | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1. | டிரான்ஸ்வால் | - | ஜெர்மனியின் குடியரசுத்தலைவர் | **தங்கம்** |
| 2. | ஹிண்டன்பர்க் | - | ஹிட்லர் | **ஜெர்மனியின் குடியரசுத்தலைவர்** |
| 3. | மூன்றாம் ரெய்க் | - | இத்தாலி | **ஹிட்லர்** |
| 4. | மாட்டியோட்டி | - | தங்கம் | **இத்தாலி** |

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. **இந்தோ–சீனாவில் நடைபெற்ற 'வெள்ளை பயங்கரவாதம்' குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** ※※ [PTA–6; Aug-'22]

(i) 1929-ல் வியட்நாம் வீரர்கள் **இராணுவப் புரட்சி** செய்தனர்.

(ii) பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலை செய்வதற்கான **முயற்சியும் தோல்வியடைந்தது.**

(iii) கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் **விவசாயிகளின் புரட்சியும்** நடைபெற்றது.

(iv) இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து **புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.** இதுவே "வெள்ளை பயங்கரவாதம்" எனப்பட்டது.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) வியட்நாம் வீரர்கள் பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலை செய்வதற்கான **முயற்சியில் தோல்வியுற்றனர்.**

(ii) இதன் விளைவாக **விவசாயிகளின் புரட்சி** ஏற்பட்டது.

(iii) **புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.**

---

**2. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?** ※ [April-'23]

(i) **1922 அக்டோபரில் முசோலினி** பாசிஸ்டுகளின் மாபெரும் அணிவகுப்பு ஒன்றை ரோமாபுரியை நோக்கி நடத்தினார்.

(ii) முசோலினியின் **வலிமையைக் கண்டு வியந்து** போன அரசர் மூன்றாம் விக்டர் இம்மானுவேல் அவரை **ஆட்சியமைக்க வரவேற்றார்.**

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) **1922 அக்டோபரில்** ரோம் நோக்கி **முசோலினி** பாசிஸ்டுகளின் மாபெரும் ஒரு அணிவகுப்பை நடத்தினார்.

(ii) மூன்றாம் விக்டர் இம்மானுவேல் **ஆட்சியமைக்க வரவேற்றார்.**

---

**3. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?** ※ ※ ※ [Sep-'21; FRT & May-'22; April-'25]

(i) பொருளாதாரப் பெருமந்தம் **இந்திய வேளாண்மைக்கும்** உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் **மரண அடியைக் கொடுத்தது.**

(ii) **வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.** ஆனால் அரசுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் **இரண்டு மடங்காயிற்று.**

(iii) விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத் தூண்டியது.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) **வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.**

(ii) குத்தகைத் தொகையில் **மாற்றமேதுமில்லை.**

(iii) விவசாயிகள் அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் இரு மடங்காயிற்று.

---

**4. "டாலர் ஏகாதிபத்தியம்" – தெளிவுபட விளக்குக.** ※ ※ ※ ※ [PTA-2; QY & HY-'23; April-'24]

டாலர் ஏகாதிபத்தியம் என்பது தொலைதூர நாடுகளுக்குப் **பொருளாதார உதவி** செய்வதன் மூலம் அவற்றின் மீது **ஆதிக்கம் செலுத்தவும், தக்க வைத்துக்கொள்ளவும்,** அமெரிக்கா பின்பற்றிய கொள்கையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லாகும்.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) இது **அமெரிக்கா** பின்பற்றிய கொள்கை.

(ii) தொலைதூர நாடுகளுக்குப் **பொருளாதார உதவி செய்வதால்** அவற்றின் மீது **ஆதிக்கம் செலுத்தி** தக்க வைத்துக் கொள்ளுதல்.

## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.**

**பாசிசத்தின் தோற்றம் :**

(i) 1919 ஆம் ஆண்டில், ஹிட்லர் உட்பட **ஏழு நபர்களைக்** கொண்ட **ஒரு குழுவானது**, மியூனிச் நகரில் சந்தித்து.

(ii) தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் **உழைப்பாளர் கட்சி** எனும் நாசி கட்சியை நிறுவியது.

(iii) 1923-இல் பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற அவர் முயற்சி மேற்கொண்டார்.

(iv) அவர் மேற்கொண்ட தேசியப் புரட்சி அவரைச் **சிறையில் தள்ளியது.**

(v) அவர் சிறையில் இருந்தபோது அரசியல் சிந்தனையை உள்ளடக்கிய **சுயசரிதை நூலான `மெயின் காம்ப்'** எனும் நூலை எழுதினார்.

(vi) 1923-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் **6,000,000 வாக்குகளைப்** பெற்றனர்.

(vii) முதலாளிகள், சொத்து உரிமையாளர்கள் நாசிசத்தை ஆதரிக்கத் தொடங்கினார்.

(viii) இதைப் பயன்படுத்தி ஹிட்லர் **தவறான வழியில் அதிகாரத்தைக்** கைப்பற்றினார்.

**ஹிட்லரின் நாசிச அரசு :**

(i) ஜெர்மனியில் **குடியரசு ஆட்சி கவிழ்ந்தது.**

(ii) இதனால் தொழிலதிபர்களும் வங்கியாளர்களும் குடியாட்சிக் கட்சியினரும் ஹிட்லரை **சான்சிலராக** அமர்த்தும்படி வற்புறுத்தினர்.

(iii) ஹிட்லரின் நாசிச அரசு **பாராளுமன்ற ஜனநாயக அரசை முடிவுக்கு** கொண்டு வந்தது.

(iv) ஹிட்லர் **ஸ்வஸ்திக் சின்னம்** பொறிக்கப்பட்ட தேசிய சோசலிசக் கட்சியின் கொடியை அறிமுகம் செய்தார்.

(v) **1934-ஆம்** ஆண்டு **ஹிண்டன்பர்க் இயற்கை** அடைந்தார்.

(vi) சான்சிலராக இருந்த ஹிட்லர் **குடியரசுத் தலைவராகவும் ராணுவத்தின் தலைமை தளபதியாகவும்** பொறுப்பேற்றார்.

## மெல்ல கற்கும் மாணவர்களுக்காக

**ஜெர்மானிய பாசிசத்தின் தோற்றம் :**

(i) ஹிட்லர் முதல் உலகப்போரின் போது **பவேரியாவின் படையில்** பணியாற்றினார்.

(ii) அவர் மேற்கொண்ட **தேசியப்புரட்சி** அவரைச் **சிறையில்** தள்ளியது.

(iii) சிறையில் இருந்தபோது **`மெயின் காம்ப்'** எனும் நூலை எழுதினார்.

(iv) தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி **வெற்றி பெற்றது.**

(v) முதலாளிகள், சொத்து உரிமையாளர்கள் நாசிசத்தை ஆதரித்தனர். ஹிட்லர் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி **அதிகாரத்தைக்** கைப்பற்றினார்.

**ஹிட்லரின் நாசிச அரசு :**

(i) குடியாட்சிக் கட்சியினர் ஹிட்லரை **சான்சிலராக** தேர்ந்தெடுக்கும்படி குடியரசுத் தலைவரை வற்புறுத்தினர்.

(i) பிற கட்சிகள் அனைத்தும் சட்டத்திற்கு புறம்பானவை என அறிவிக்கப்பட்டன.

(ii) **ஹிண்டன்பர்க் இயற்கை எய்தவே** ஹிட்லர் **குடியரசுத் தலைவராகவும் தலைமைத் தளபதியாகவும்** பொறுப்பேற்றார்.

**2. உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.**

**மாகாணங்களில் இரட்டையாட்சி :**

(i) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடானது 1905-இல் **சுதேசி இயக்கத்தோடு தொடங்கியது.**

(ii) 1919-இல் இந்திய அரசுச்சட்டம் **இரட்டையாட்சி முறையை அறிமுகம்** செய்தது.

(iii) அச்சட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சட்டசபைகளை இந்திய அமைச்சர்களே நிர்வகிக்கவும் வழிவகை செய்தது.

(iv) இந்திய தேசிய காங்கிரஸ் இரட்டையாட்சியை **மறுத்ததோடு சட்டசபைகளை புறக்கணிக்க முடிவு** செய்தது.

**இந்தியாவைத் தொழில்மயமாக்குவதில் நடவடிக்கைக் குறைபாடுகள் :**

(i) பொருட்களுக்கு எதிர்மறையான பாகுபாட்டு மனப்பான்மையோடு வழங்கப்பட்ட பாதுகாப்பைத் தவிர காலனியப் பொருளாதாரக் கொள்கையில் மாற்றமேதுமில்லை.

(ii) ஆனால், உள்நாட்டுத் தொழில்களில் **தொழில்நுட்பம் சார்ந்த அறிவுரைகளும்** கல்வியும் வழங்குதல் போன்றவற்றிற்கு மட்டுமே அரசு உதவிகள் செய்தது.

**வேளாண்மை பெருமந்தம் :**

(i) பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது.

(ii) (எ.கா) வேளாண் உற்பத்திப் **பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.**

**1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் :**

(i) 1937-ம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலில் **அகில இந்திய தேசிய காங்கிரஸ் வெற்றியைப்** பெற்றது.

(ii) காங்கிரஸ் **அமைச்சர்களை ஆலோசிக்காமல்** ஆங்கில அரசு இந்தியாவை **இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியது.**

(iii) ஆகவே காங்கிரஸ் ராஜினமா செய்தது.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

(i) காலனிய நீக்கச் செயல்பாடானது 1905-இல் **சுதேசி இயக்கத்தோடு தொடங்கியது.**

(ii) 1919-இல் இந்திய அரசுச் சட்டம் **இரட்டையாட்சி முறையை அறிமுகம்** செய்தது.

(iii) **காலனியப் பொருளாதாரக் கொள்கையில்** மாற்றமேதுமில்லை.

(iv) வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை **பாதியாகக் குறைந்தது.**

(v) **குத்தகைத் தொகையில்** மாற்றமில்லை.

(vi) இந்திய அரசுச் சட்டம் **நேரடித் தேர்தலை அறிமுகம்** செய்தது.

(vii) காங்கிரஸ் அமைச்சரவை ராஜினமா செய்தது.

---

**3. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.** ※ [PTA–1]

**தென்னாப்பிரிக்காவில் தேசிய அரசியல் :**

(i) தென்னாப்பிரிக்காவில் இரு முக்கிய அரசியல் கட்சிகள் செயல்பட்டன.

1. யூனியனிஸ்ட் கட்சி (ஆங்கிலேயர்கள்)
2. தென் ஆப்பிரிக்கக் கட்சி (ஆப்ரிகானர்கள் / போயர்கள்)

(ii) முதல் பிரதம மந்திரியான போதா, தென் ஆப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்தவர் **ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து ஆட்சியை நடத்தினார்.**

(iii) ஆனால் தென்னாப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்த **போராடும் குணமிக்க** ஒரு பிரிவினர் **ஹெர்சாக்** என்பவரின் தலைமையின் கீழ் **தேசியக்கட்சி** எனும் **கட்சியைத் தொடங்கினர்.**

(iv) **1920-ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசியக்கட்சி 44 இடங்களைக்** கைப்பற்றியது. தென்னாப்பிரிக்கக் கட்சி **ஸ்மட்ஸ் தலைமையில் 41 இடங்களில்** வெற்றி பெற்றது.

(v) ஆங்கிலேயர் அதிகமிருந்த யூனியனிஸ்ட் கட்சி இத்தருவாயில் தென்னாப்பிரிக்கக் கட்சியுடன் இணைந்தது. இதனால் போர்க்குணம் கொண்ட ஆப்ரிகானர்களின் கட்டுப்பாட்டிலிருந்த தேசியக்கட்சியைக் காட்டிலும் ஸ்மட்ஸ் பெரும்பான்மை பெற்றார்.

### மெல்ல கற்கும் மாணவர்களுக்காக

(i) இரு முக்கியக் கட்சிகள் இருந்தன.

1. யூனியனிஸ்ட் கட்சி - ஆங்கிலேயர்கள் 2. தென் ஆப்பிரிக்கக் கட்சி - ஆப்ரிகானர்கள்

(ii) தென் ஆப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்த பிரதமர் போதா, **ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து ஆட்சியை நடத்தினார்.**

(iii) **ஹெர்சாக்** தலைமையில், தென்னாப்பிரிக்கவைச் சேர்ந்த ஒரு பிரிவினர் **தேசியக் கட்சியைத் தொடங்கினர்.**

(iv) 1920 தேர்தலில் தேசியக்கட்சி **44 இடங்களை** பெற்றது.

(v) **ஸ்மட்ஸ் தலைமையில்** தென்னாப்பிரிக்கக் கட்சி **41 இடங்களைப்** பெற்றது.

(vi) யூனியனிஸ்ட் கட்சி தென்னாப்பிரிக்கக் கட்சியுடன் இணைந்தது.

(vii) தேசியக் கட்சியைக் காட்டிலும் ஸ்மட்ஸ் பெரும்பான்மை பெற்றார்.

## PTA மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### 1 மதிப்பெண்

**1. கூற்று : தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது.** ※※

**காரணம் : அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.** [PTA–5; FRT-'22]

அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.

ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

ஈ) காரணம் சரி, ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

**விடை: ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.**

**2. லேட்டரன் உடன்படிக்கை கையெழுத்தான ஆண்டு** ※ [HY-'19]

அ) 1929 ஆ) 1928 இ) 1930 ஈ) 1927 **விடை: அ) 1929**

**3. இலத்தீன் அமெரிக்கா, அமெரிக்காவின் _______ ஐ விரும்பவில்லை.** ※ [Sep-2020]

**விடை : அமெரிக்க தலையீடு மற்றும் டாலர் ஏகாதிபத்தியம்**

**4. அமெரிக்க பங்குசந்தைகளில் முதல் பெரும் வீழ்ச்சி ஏற்பட்ட நாள் :** ※※ [Sep-'21; FRT-'22]

அ) 24 அக்டோபர் 1929 ஆ) 14 அக்டோபர் 1929

இ) 24 நவம்பர் 1925 ஈ) 24 நவம்பர் 1928 **விடை: அ) 24 அக்டோபர் 1929**

**5. பொருத்துக :** ※ [FRT-'22]

| | | | |
|---|---|---|---|
| (1) | வெள்ளை பயங்கரம் | (i) | சென்னை |
| (2) | இந்திய அரசுச் சட்டம் | (ii) | இந்தோ - சீனா |
| (3) | கண்ணாடி மாளிகை | (iii) | 1935 |
| (4) | எம்டன் | (iv) | வெர்செய்ல்ஸ் |

அ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i) ஆ) (1)-(ii), (2)-(iv), (3)-(iii), (4)-(i)

இ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i) ஈ) (1)-(iv), (2)-(ii), (3)-(iii), (4)-(i)

**விடை: இ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)**

## 2 மதிப்பெண்கள்

**1. லேட்டரன் உடன்படிக்கையின் சரத்துக்கள் யாவை?** ※ [PTA-5]

(i) பாசிஸ்ட் கட்சிக்கென ஒரு **மரியாதையைப் பெறுவதற்காக,** வாட்டிகன் நகரத்தை ஒரு சுதந்திர அரசாக அங்கீகரிப்பதின் மூலம், ரோமன் கத்தோலிக்கத் **திருச்சபையின் ஆதரவைப் பெறுவதில்** முசோலினி வெற்றி பெற்றார்.

(ii) இதற்குக் கைமாறாக திருச்சபை **இத்தாலிய அரசை அங்கீகரித்தது.** ரோமன் கத்தோலிக்கச் சமயம் **இத்தாலியின் மதமாக** அங்கீகரிக்கப்பட்டது.

(iii) மேலும் பள்ளிகளில் **மதபோதனைகள்** செய்வதற்கு ஆணையிடப்பட்டது.

(iv) மேற்சொல்லப்பட்டவற்றை சரத்துக்களாகக் கொண்ட **லேட்டரன் உடன்படிக்கை 1929இல்** கையெழுத்தாயிற்று.

**2. மன்றோ கோட்பாட்டை விளக்குக.** ※ ※ [GMQP & QY-'19]

**மன்றோவின் கோட்பாடு :**

(i) அமெரிக்கக் குடியரசுத் தலைவர் **மன்றோ** தனது புகழ்பெற்ற **மன்றோ கோட்பாட்டை** முன் வைத்தார்.

(ii) அமெரிக்காவின் எந்த பகுதியிலும் அது வடக்கோ தெற்கோ ஐரோப்பியர்கள் தலையீட்டால் அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கெதிரான போராகக் கருதப்படும் என அறிவித்தார்.

(iii) **1830** வாக்கில் ஒட்டுமொத்த தென்அமெரிக்காவும் **ஐரோப்பிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை** பெற்றன.

**3. தங்க மதிப்பீட்டு அளவு என்றால் என்ன?** ※ ※ [FRT-'22; QY-'24]

(i) தங்க மதிப்பீட்டு அளவு என்பது ஒரு **நாணய முறை.**

(ii) இதில் ஒரு நாட்டினுடைய **நாணயம்** அல்லது **காகிதப்பணம்** தங்கத்தோடு நேரடித் தொடர்புடைய ஒரு மதிப்பினைப் பெற்றிருக்கும்.

## 5 மதிப்பெண்கள்

**1. இத்தாலியில் முசோலினியின் எழுச்சியினைப் பற்றி கூறுக.** ※ [PTA-3]

(i) ஆற்றல் மிக்க பேச்சாளரான முசோலினி முதல் உலகப்போரில் இத்தாலி கலந்து கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்த சோசலிஸ்டுகளிடமிருந்து பிரிந்துசெல்வதற்கும், வன்முறையைப் பயன்படுத்துவதற்கும் ஆதரவளிக்கத் தொடங்கினார்.

(ii) **1919இல் பாசிசக்கட்சி** தொடங்கப்பட்ட போது முசோலினி உடனடியாக அதில் உறுப்பினரானார். பாசிஸ்டுகள் **அதிகாரம், வலிமை, ஒழுக்கம்** ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியதால், தொழிலதிபர்கள், தேசியவாதிகள், முன்னாள் ராணுவத்தினர், நடுத்தரவர்க்கத்தினர், இளைஞர்கள் ஆகியோரின் ஆதரவைப்பெற்றனர்.

(iii) பாசிஸ்டுகள் சுதந்திரமாக வன்முறையைக் கைக்கொண்டனர். **1922 அக்டோபரில்** பாசிஸ்டுகளின் மாபெரும் அணிவகுப்பு ஒன்றை ரோமாபுரியை நோக்கி நடத்தினார்.

(iv) முசோலினியின் வலிமையைக் கண்டு வியந்துபோன அரசர் **மூன்றாம் விக்டர் இம்மானுவேல்,** முசோலினியை ஆட்சியமைக்க வரவேற்றார்.

(v) மக்களாட்சிக் கட்சியின் ஒருங்கிணைக்க முடியாத தன்மையும் உறுதியுடன் செயல்பட முடியாத இயலாமையும் முசோலினியின் வெற்றிக்கு உதவின.

---

**2. பாரிஸ் அமைதி மாநாட்டின் முடிவுகள் எவ்வாறு இத்தாலியில் பாசிசம் தோன்ற காரணமாக அமைந்தன?**

**பாரிஸ் அமைதி மாநாட்டின் முடிவுகள் :** ※ [PTA-4]

(i) போரில் பங்கு கொண்டதால் ஏற்பட்ட **பணச்செலவோ** மிகப் பெரியது.

(ii) போருக்குப் பின்னர் போரின் ஆதாயங்கள் பகிரப்பட்டபோது இத்தாலி தான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவாகவே பெற்றது.

(iii) **வெர்செயில்ஸ் உடன்படிக்கையின்** மூலமாக இத்தாலிக்கு மிகச்சிறிய பகுதிகளே கிடைத்ததால் **தேசியவாதிகளும் மகிழ்வற்றே** இருந்தனர்.

(iv) போரினால் ஏற்பட்ட பணவீக்கத்தைத் தொடர்ந்து **பொருட்களின் விலைகளும் உயர்ந்தன.**

(v) **எதிர்ப்புகளும் வேலை நிறுத்தங்களும்** அடிக்கடி நடைபெற்றன.

(vi) வெர்செய்ல்ஸில் ஏற்பட்ட அவமானத்திற்கு அப்போதைய இத்தாலியின் ஆட்சியாளர்களே பொறுப்பு என மக்கள் நம்பினர்.

(vii) இத்தகைய சூழ்நிலையே இத்தாலியில் பாசிசம் தோன்ற காரணமாக அமைந்தன.

---

**3. வியட்மின் கட்சியின் உதயம் குறித்து விவரிக்கவும்.** ※※ [HY-'19; Sep-2020]

(i) **இந்தோ-சீனாவில்** இருந்த அரசியல் கட்சிகளில் வியட்நாம் தேசியக் கட்சியே முக்கியமானது. 1927இல் உருவாக்கப்பட்ட இக்கட்சி மக்கள் தொகையில் **பணக்காரர்களையும் நடுத்தரப்பிரிவு மக்களையும்** கொண்டிருந்தது.

(ii) 1929இல் வியட்நாம் வீரர்கள் இராணுவப் புரட்சி செய்தனர். இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து '**வெள்ளை பயங்கரவாதம்**' என்பது அரங்கேறியது. புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். வெள்ளைப் பயங்கரவாதத்திற்குப் பின்னர் **ஹோ சி மின் மாஸ்கோ** சென்றார்.

(iii) இரண்டாவது உலகப்போரின் தொடக்கத்தில் பிரான்ஸ் ஜெர்மனியால் **1940இல்** தோற்கடிக்கப்பட்டது.

(iv) ஹோ சி மின்னும் அவருடைய தோழர்களும் இச்சூழலைப் பயன்படுத்தி வியட்நாமின் விடுதலையை முன்னெடுத்தனர்.

(v) 1941 ஜனவரி திங்கள் எல்லையைக் கடந்து வியட்நாம் வந்த அவர்கள் '**வியட்நாம் விடுதலை சங்கம்**' அல்லது **வியட்மின்** எனும் அமைப்பை நிறுவினர். இது தனித்தன்மை வாய்ந்த வியட்நாமிய தேசியத்திற்குப் புதிய அழுத்தத்தைக் கொடுத்தது.

---

**4. ஹோ சி மின் – குறிப்பு வரைக.** ※ *[Sep-2020]*

(i) ஹோ சி மின் **1890இல்** டோங்கிங்கில் பிறந்தார். தனது 21 ஆவது வயதில் அவர் ஐரோப்பா சென்றார்.

(ii) லண்டன் உணவுவிடுதியொன்றில் **சமையல்கலைஞராய்ப்** பணியாற்றிய பின் அவர் பாரிஸ் சென்றார்.

(iii) பாரிஸ் அமைதி மாநாட்டில் **வியட்நாமின் சுதந்திரத்திற்காக** ஆதரவு திரட்டினார்.

(iv) அவர் எழுதிய "**விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்**" எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது.

(v) 1921இல் ஹோ சி மின் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராக இருந்தார்.

(vi) 1925இல் '**புரட்சிகர இளைஞர் இயக்கம்**' எனும் அமைப்பை நிறுவினார்.

---

**5. பன்னாட்டுச் செலவானி முறையில் ஏற்பட்ட சீர்குலைவு பற்றி விவரிக்கவும்.** ※ [FRT-'22]

**பன்னாட்டுச் செலாவணி முறையில் ஏற்பட்ட சீர்குலைவு :**

(i) இங்கிலாந்தில் **செலவுகளைச் சுருக்குதல், வரிகளை உயர்த்துதல்** போன்ற அவசரகால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

(ii) எனவே இங்கிலாந்து தங்கநாணய ஏற்பளவு முறையைக் கைவிட முடிவுசெய்தது. உடனடியாக ஏனைய பல நாடுகளும் தங்கநாணய ஏற்புமுறையை விட்டு விலகின.

(iii) பெருங்கேட்டினை ஏற்படுத்தவல்ல இச்சூழலுக்கு எதிர்நடவடிக்கை மேற்கொள்ளவும், உள்நாட்டுச் சந்தையைப் பாதுகாக்கும் பொருட்டு ஒவ்வொரு நாடும் ஒரு பாதுகாப்புக் கொள்கையை மேற்கொண்டதோடு, பணத்தின் மதிப்பையும் குறைத்தன.

(iv) பணமதிப்புக் குறைப்பால் கடன்கொடுப்போர், கடன்கொடுப்பதை நிறுத்தினர். இதனால் உலகஅளவில் **கடன்வழங்குதல், வாங்குதல்** நடவடிக்கையில் **பெருஞ்சுணக்கம்** ஏற்பட்டது.

(v) இவ்வாறு தங்களின் பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு நாடுகள் மேற்கொண்ட தற்காப்பு நடவடிக்கைகள் முன்னெப்போதுமில்லாத அளவில் உலகப்பொருளாதாரச் செயல்பாடுகளை சரிவுக்கு இட்டுச்சென்றது.

(vi) இதனுடைய விளைவு ஆழமானதாகவும் நீண்டகாலம் நீடித்திருப்பதாகவும் அமைந்ததால் வரலாற்று அறிஞர்களும் பொருளாதார மேதைகளும் இதனைப் **பெருமந்தம்** என அழைத்தனர்.

---

**6. உலகப் பொருளாதாரப் பெருமந்தம் பற்றி விவரிக்கவும்.** ※ [FRT-'22]

(i) **முதல் உலகப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிப்போக்குகள் :** முதல் உலகப்போரானது போர்க்காலப் பெரும்வளர்ச்சி முடிவற்றுத் தொடரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சில குறிப்பிட்ட தொழில்களின் விரிவாக்கத்திற்கு வழிகோலியது. இருந்த போதிலும் போர் ஒரு முடிவுக்கு வந்தபோது, போர்த்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாகி வளர்ந்த சில தொழில்கள் கைவிடப்பட வேண்டியவைகளாக அல்லது மாற்றி அமைக்கப்பட வேண்டியவைகளாயின. **வெர்செய்ல்ஸ்** உடன்படிக்கை ஏற்படுத்திய **அரசியல்சிக்கல்கள்,** நிலைமையை மேலும் மோசமாக்கியது.

(ii) **அமெரிக்காவில் பங்குச்சந்தையின் வீழ்ச்சி : முதல் பெரும் வீழ்ச்சி 1929 அக்டோபர்** 24இல் அரங்கேறியது. அன்றைய தினம் நியூயார்க் நகரப் பங்குச்சந்தையில் பங்குகளின் விலைகள் செங்குத்தாய் சரிந்தன. நம்பிக்கை இழந்த முதலீட்டாளர்களும், வாடிக்கையாளர்களும் ஏனைய மக்களும் பங்குகளை விற்கத் தொடங்கினர். இருப்பில் இருந்தனவற்றையும் விற்றுத்தீர்க்கத் தலைப்பட்டனர்.

(iii) **பன்னாட்டுச் செலாவணி முறையில் ஏற்பட்ட சீர்குலைவு :** இங்கிலாந்தில் **செலவுகளைச் சுருக்குதல், வரிகளை உயர்த்துதல்** போன்ற அவசரகால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. எனவே இங்கிலாந்து **தங்கநாணய ஏற்பளவு** முறையைக் கைவிட முடிவுசெய்தது.

(iv) **அரசியலில் ஏற்படுத்திய அதிர்வுகள் :** பெருமந்தம் பல நாடுகளின் அரசியல் நிலைமைகளை மாற்றியமைத்தது. இங்கிலாந்தில் **1931**இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் **தொழிலாளர் கட்சி** தோற்கடிக்கப்பட்டது.

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1.** முதல் உலகப்போரினால் ______ நாடுகள் நிதிசார்ந்த வகையிலும், அரசியல் ரீதியாகவும் வலிமைகுன்றின. **விடை: ஐரோப்பிய**

**2.** 1931 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் _________ தோற்கடிக்கப்பட்டது. **விடை: தொழிலாளர் கட்சி**

**3.** 1918 முதல் 1933 முடிய _________ நாடு ஒரு குடியரசாக இருந்தது. **விடை: ஜெர்மனி**

**4.** ____________ இல் இந்திய அரசுச்சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது. **விடை: 1919**

**5.** இன ஒதுக்கல் கொள்கை பின்பற்றிய நாடு _________. **விடை: தென் ஆப்பிரிக்கா**

**6.** தென் அமெரிக்காவில் அஸ்டெக்குகல் _________ ஆண்டுகள் தங்கள் பேரரசை ஆட்சி செய்தனர். **விடை : 200**

**7.** முதல் உலகப் போரின் முடிவில் _________ வலுவான நிதி நிலையைக் கொண்டிருந்தது. **விடை : அமெரிக்கா**

**8.** வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் மூலமாக ______________ க்கு மிகச்சிறிய பகுதிகளே கிடைத்தது. **விடை : இத்தாலி**

**9.** 1922இல் முசோலினி பாசிஸ்டுகளின் ரோமாபுரியை நோக்கிய மாபெரும் _________ ஒன்றை நடத்தினார். **விடை : அணிவகுப்பு**

**10.** முசோலினி _________ எனும் பட்டத்தை சூட்டிக்கொண்டார். **விடை : டியூஸ்**

**11.** _________ கூட்டணி 1939வரை நீடித்தது. **விடை : ஸ்மட்ஸ் - ஹெர்சாக்**

**12.** அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகள் ______ ஊக்கமளித்தன. **விடை : லத்தீன் அமெரிக்கர்களுக்கு**

**13.** அமெரிக்கா பின்பற்றிய கொள்கையே ______ ஏகாதிபத்தியம் விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும். **விடை : டாலர்**

**14.** முதல் உலகப்போரின் முடிவில் _________ உலகத்திற்கு கடன் வழங்கும் நாடாக இருந்தது. **விடை : அமெரிக்கா**

**15.** இரண்டாம் டியூஸ் எனும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டவர் _________. **விடை : முசோலினி**

**16.** முசோலினி _________ நகரத்தை சுதந்திர அரசாக அறிவித்தார். **விடை : வாட்டிகன்**

**17.** ___ ஜுடாயிசத்தையும் மார்க்ஸியத்தையும் இணைத்துப் பார்த்தார். **விடை : ஹிட்லர்**

**18.** _____________ மூன்றாவது ரெய்க் என அழைக்கப்பட்டது. **விடை : ஹிட்லரின் நாஜி அரசு**

**19.** ஹிட்லரின் சோசலிசக் கட்சிக் கொடியில் _____ சின்னம் பொறிக்கப்பட்டு இருந்தது. **விடை : ஸ்வஸ்திக்**

**20.** ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி ______ நிறுவப்பட்டது. **விடை : லிப்சிக் நகரத்தில்**

**21.** யூதப்படுகொலை நாஜிக்களால் _____ என அழைக்கப்பட்டது. **விடை : இறுதித்தீர்வு**

**22.** வியட்நாம் தேசியக்கட்சி ______ ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. **விடை : 1927**

**23.** இந்தோ-சீனாவில் விவசாயப்புரட்சி ______ தலைமையில் நடைபெற்றது. **விடை : கம்யூனிஸ்ட்கள்**

**24.** ‘விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்’ எனும் சிற்றேடினை எழுதியவர் ______ . **விடை : ஹோசிமின்**

**25.** முசோலினியின் தந்தை ________ தொழில் செய்து வந்தார். **விடை : இரும்பு வேலை**

**26.** __________ இன ஒதுக்கல் கொள்கையின் மூளையாக செயல்பட்டார். **விடை : வெர்வோர்டு**

**27.** 11-ஆம் நூற்றாண்டில் பெரிய நகரங்கள் இணைந்து __________ எனும் அமைப்பாக உருவானது. **விடை : மாயாபன்**

**28.** மெக்சிகன் நாகரிகத்தை சீர்குலைத்த ஸ்பானியப் படையெடுப்பாளர் __________ ஆவார். **விடை : ஹெர்னன் கோர்ட்ஸ்**

**29.** அடிமை முறையையும் பிரான்சின் காலனியக் கட்டுப்பாடுகளையும் தூக்கியறிந்த கரீபிய நாடு எது __________. **விடை : ஹைதி**

**30.** முதலாம் பெட்ரோ __________ சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தார். **விடை : பிரேசிலின்**

## II. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

**1.** **i) போர்த் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உருவாகி வளர்ந்த சில தொழில்கள் கைவிடப்பட வேண்டியவைகளாக இருந்தன.**

**ii) பெருமளவில் இருப்பில் இருந்த பொருட்களையும் பண்டங்களையும் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களையும் பணிநீக்கம் செய்ய வேண்டியதாயிற்று.**

**iii) முதல் உலகப்போரின் முடிவில் ஜெர்மனி வலுவான நிதிநிலையைக் கொண்டிருந்தது.**

**iv) அமெரிக்கா உலகத்திற்குக் கடன் வழங்கும் நாடாக இருந்தது.**

அ) (i) மற்றும் (ii) சரியானவை ஆ) (i), (ii) மற்றும் (iv) சரியானவை

இ) (iv) மட்டும் சரி ஈ) (i), (iii) மற்றும் (iv) சரியானவை

**விடை : ஆ) (i), (ii) மற்றும் (iv) சரியானவை**

**2.** **கூற்று : வாட்டிகன் நகரத்தை ஒரு சுதந்திர அரசாக அங்கீகரிப்பதின் மூலம், ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதரவைப் பெறுவதில் முசோலினி வெற்றிப் பெற்றார்.**

**காரணம் : பாசிச கட்சிக்கு என ஒரு மரியாதையை ஏற்படுத்த விரும்பினார்.**

அ) கூற்றும் காரணமும் சரியானவை.

ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

இ) கூற்றும் காரணமும் தவறு

ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

**விடை: அ) கூற்றும் காரணமும் சரியானவை**

## III. பொருத்துக.

**1.**

| | | | |
|---|---|---|---|
| 1. | 1929 | அ) | வெர் வோர்டு |
| 2. | ஜெர்மனி | ஆ) | அமெரிக்க பங்குச் சந்தையின் வீழ்ச்சி |
| 3. | ஸ்வஸ்திக் சின்னம் | இ) | குடியரசு ஆட்சி |
| 4. | இறுதித் தீர்வு | ஈ) | நாசிச கட்சி |
| 5. | தென் ஆப்பிரிக்காவின் பிரதமர் | உ) | யூத படுகொலை |

**விடை : 1. ஆ, 2. இ, 3. ஈ, 4. உ, 5. அ**

2.

| | | | |
|---|---|---|---|
| 1. | தௌசெயிண்ட லூ வெர்தூரி | அ) | மெக்சிகோ |
| 2. | சைமன் பொலிவர் | ஆ) | அமெரிக்க குடியரசுத் தலைவர் |
| 3. | பிராங்களின் D. ரூஸ்வெல்ட் | இ) | 1791 - 1804 |
| 4. | மத்திய தென் அமெரிக்கா | ஈ) | விடுதலை வீரர் |
| 5. | வெனிசுலா, ஈக்விடாரும் | உ) | கிரான் கொலம்பியா |

**விடை : 1. இ, 2. ஈ, 3. ஆ, 4. அ, 5. உ**

## IV. சுருக்கமாக விடையளிக்கவும். 2 மதிப்பெண்கள்

**1. அமெரிக்காவில் பங்குச்சந்தை வீழ்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?**

(i) முதலீட்டாளர்களும் ஏனைய மக்களும் **பங்குகளை விற்கத் துவங்கினர்**.

(ii) **இருப்பில்** இருந்தனவற்றையும் **விற்றுத்தீர்க்கத் தலைப்பட்டனர்**. ஆனால் **வாங்குவதற்கு யாருமில்லை.**

(iii) இப்பெருவீழ்ச்சியும் முதலீட்டில் ஏற்பட்ட சரிவும் **அமெரிக்க வங்கிகளின் தோல்விக்கு** வழிவகுத்தன.

(iv) அமெரிக்க முதலீட்டாளர்கள் வெளிநாடுகளில் செய்திருந்த **முதலீடுகளைத் திரும்பப் பெறும் கட்டாயத்திற்கு** உள்ளாயினர்.

**2. பிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட் தன்னுடைய "அண்டை நாட்டுடன் நட்புறவு" என்ற கொள்கையில் என்ன அறிவித்தார்?**

(i) அமெரிக்கா வேறு எந்த நாடுகளின் **உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடாது**.

(ii) லத்தின் அமெரிக்கா நாடுகளுக்குப் **பொருளாதார தொழில்நுட்ப உதவிகளைச்** செய்யவும் ஒத்துக்கொண்டார்.

**3. 'பாசிஸம்' வரையறு.**

பாசிஸம் என்பது **தீவிர ஆதிக்க மனப்பான்மை** கொண்ட **அதிதீவிர தேசியவாதத்தின்** ஓர் வடிவம். சர்வாதிகார வல்லமையும், எதிர்ப்பை **வன்முறை** கொண்டு அடக்குவதும் சமூகத்தையும், பொருளாதாரத்தையும் வலுவான மத்திய அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதும் இதன் **பண்புகளாகும்**.

## V. விரிவான விடையளி. 5 மதிப்பெண்கள்

**1. போயர் போர்கள் பற்றி விளக்கி எழுதுக.**

(i) இங்கிலாந்தின் காலனிகளான **நேட்டால், கேப்காலனி** ஆகிய இரண்டிற்கும் சுதந்திர போயர் நாடுகளான **டிரான்ஸ்வால்** மற்றும் **ஆரஞ்சு** சுதந்திர அரசு ஆகியவற்றுக்கிடையே நீண்ட காலமாக **நட்புறவு** நிலவவில்லை.

(ii) 1886-இல் டிரான்ஸ்வால் பகுதியில் **தங்கம்** இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

(iii) பெரும் எண்ணிக்கையில் **ஆங்கிலேயச் சுரங்கத்தொழில் சார்ந்தோர்** ஜோகன்னெஸ்பர்க்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேறினர்.

(iv) குடியேறியவர்கள் மீது **அதிக வரிகளை** விதித்த போயர்கள் அவர்களுக்கு அரசியல் **உரிமையையும்** மறுத்தனர்.

(v) தென்னாப்பிரிக்காவில் யார் அதிகாரம் மிகுந்தவர்கள்? **போயர்களா?** அல்லது **ஆங்கிலேயர்களா?** எனும் கேள்வி எழுந்தது.

(vi) ஆங்கிலேயர்களால் **தாக்கப்படுவோம்** என்ற அச்சத்தில் போயர்கள் **ஆயுதம்** தரித்தனர்.

(vii) 1899-ல் தொடங்கிய **போயர் போர்கள்** 1902 வரை மூன்று ஆண்டுகள் தொடர்ந்தன.

(viii) போயர்கள் **கொரில்லாப்போரைக்** கைக்கொண்டனர்.

(ix) போயர் பெண்களையும் குழந்தைகளையும் **பாசறைகளில் சிறை** வைத்தனர்.

(x) **உணவு, மருத்துவப்** பற்றாக்குறையின் காரணமாகவும் சுகாதார வசதிகளின்மையாலும் **26,000** போயர் மக்கள் மாண்டனர்.

(xi) இரண்டு போயர் நாடுகளையும் ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர்.

(xii) 1907-இல் டிரான்ஸ்வால், ஆரஞ்சு சுதந்திர அரசு ஆகிய இரு நாடுகளுக்கும் முழுமையான **பொறுப்பாட்சி** வழங்கப்பட்டது.

(xiii) பின் இந்நான்கும் ஓர் **ஒன்றியமாக** உருவானது.

(xiv) **1910-ஆம்** ஆண்டு தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமானது.

---

# அலகுத் தேர்வு

**காலம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள்: 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

**1. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டனர்.**

அ) ஆங்கிலேயர் ஆ) ஸ்பானியர் இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர்

**2. லத்தீன் அமெரிக்காவுடன் 'அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைபிடித்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் யார்?**

அ) பிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன்

இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்

**3. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?**

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் ____________.

5. ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா ____________ ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

6. போயர்கள் ____________ என்றும் அழைக்கப்பட்டனர்.

**III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.** (2 × 1 = 2)

**7. i) முதல் உலகப்போரில் இத்தாலியின் முதன்மையான சவாலான பணி ஆஸ்திரியர்களை தெற்குமுனையில் நிறுத்தி வைப்பதாகும்.**

**ii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச்சந்தை வீழ்ச்சி 1929 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாளில் ஏற்பட்டது.**

**iii) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966 இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.**

அ) (i), (ii) ஆகியவை சரி ஆ) (iii) சரி

இ) (ii), (iii) ஆகியவை சரி ஈ) (i), (ii), (iii) ஆகியவை சரி

8. கூற்று : **1884-85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.**

காரணம் : **ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.**

அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே சரி.

ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல.

இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை.

**IV. பொருத்துக.** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 9. | டிரான்ஸ்வால் | - அ) | இத்தாலி |
| 10. | ஹின்டன்பர்க் | - ஆ) | ஹிட்லர் |
| 11. | மூன்றாம் ரெய்க் | - இ) | ஜெர்மனியின் குடியரசுத்தலைவர் |
| 12. | மாட்டியோட்டி | - ஈ) | தங்கம் |

**V. சுருக்கமாக விடையளிக்கவும்.** (4 × 2 = 8)

13. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?

14. லேட்டரன் உடன்படிக்கையின் சரத்துக்கள் யாவை?

15. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?

16. "டாலர் ஏகாதிபத்தியம்" - தெளிவுபட விளக்குக.

**VI. விரிவான விடையளிக்கவும்.** (1 × 5 = 5)

17. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.

## அலகு 3

# இரண்டாம் உலகப்போர்



## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?**

அ) செப்டம்பர் 2, 1945 ஆ) அக்டோபர் 2, 1945

இ) ஆகஸ்டு 15, 1945 ஈ) அக்டோபர் 12, 1945

**விடை : அ) செப்டம்பர் 2, 1945**

---

**2. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?** ※※※※ [SRT & Aug-'22; April & July-'23]

அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பர்லின் இ) உட்ரோ வில்சன் ஈ) பால்டுவின்

**விடை : இ) உட்ரோ வில்சன்**

---

**3. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?** ※ [April-'24]

அ) க்வாடல்கெனால் போர் ஆ) மிட்வே போர்

இ) லெனின்கிரேடு போர் ஈ) எல் அலாமெய்ன்போர் **விடை : ஆ) மிட்வே போர்**

---

**4. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?** ※※ [July & QY-'24]

அ) கவாசாகி ஆ) டோக்கியோ இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி

**விடை : இ) ஹிரோஷிமா**

---

**5. ஹிட்லர் எம்மக்களை மிகவும் கொடுமைப்படுத்தினார்?**

அ) ரஷ்யர்கள் ஆ) அரேபியர்கள் இ) துருக்கியர்கள் ஈ) யூதர்கள்

**விடை : ஈ) யூதர்கள்**

---

**6. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?** ※ [April-'24]

அ) சேம்பர்லின் ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்

இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஸ்டேன்லி பால்டுவின் **விடை : அ) சேம்பர்லின்**

---

**7. எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது?** ※ [Sep-2020]

அ) ஜூன் 26, 1942 ஆ) ஜூன் 26, 1945 இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1, 1945

**விடை : ஆ) ஜூன் 26, 1945**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. படை நீக்கம் செய்யப்பட்ட ________ பகுதியை ஹிட்லர் தாக்கினார். **விடை: ரைன்லாந்து**

2. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிக்கிடையேயான ஒப்பந்தம் ______________ என அழைக்கப்பட்டது. **விடை: ரோம் - பெர்லின் டோக்கியோ அச்சு**

3. 1940இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் ________ ஆவார். **விடை: சேம்பர்லின்**

4. ____________________ என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி. **விடை: ரேடார்**

## III. பொருத்துக.

| | | | | **விடைகள்** |
|---|---|---|---|---|
| 1. | பிளிட்ஸ்கிரிக் | - | ஸ்டாலின் கிரேடு | **மின்னல் வேகத்தாக்குதல்** |
| 2. | ராயல் கப்பற்படை | - | சாலமோன் தீவு | **பிரிட்டன்** |
| 3. | வோல்கா | - | பிரிட்டன் | **ஸ்டாலின் கிரேடு** |
| 4. | க்வாடல்கெனால் | - | மின்னல் வேகத்தாக்குதல் | **சாலமோன் தீவு** |

## IV. சரியான கூற்றைத் தெரிவு செய்யவும்.

1. **கூற்று : குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட், தனித்திருத்தல் கொள்கையிலிருந்து மாற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார்.**

**காரணம் : அவர் 1941இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.** ※ [QY-'19]

அ) கூற்றும் காரணமும் சரி. ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை.

ஈ) காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை. **விடை: அ) கூற்றும் காரணமும் சரி**

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. **முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?** ※ ※ ※ ※ [PTA-1; HY-'19 & '23; SRT-'22; QY-'23]

(i) முசோலினி - இத்தாலி (ii) ஹிட்லர் - ஜெர்மனி (iii) பிராங்கோ - ஸ்பெயின்

2. **ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?** ※ ※ [April-'23; QY-'24]

(i) அடால்ப் ஹிட்லர் தனது வல்லமைமிக்க **சொற்பொழிவாற்றும் திறமையாலும்,** உணர்ச்சி மிக்கப் **பேச்சுகளாலும்** மக்களை கவர்ந்தார்.

(ii) ஜெர்மனியை அதன் **இராணுவப் புகழ்மிக்க** முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாகவும் கூறினார்.

### மெல்ல கற்கும் மாணவர்களுக்காக

(i) தனது வலிமைமிக்க **சொற்பொழிவாற்றும் திறமையாலும்,** உணர்ச்சி மிக்கப் **பேச்சுகளாலும்** மக்களை கவர்ந்தார்.

(ii) ஜெர்மனியை அதன் **இராணுவப் புகழ்மிக்க** காலத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் கூறினார்.

**4. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.** ※[PTA–3]

**நெல் :**

(i) நெல் இந்தியாவின் **பூர்வீகப் பயிராகும்.**

(ii) இது **அயனமண்டலப்** பயிராகும்.

(iii) 24°C சராசரி வெப்பநிலையும், 150 செ.மீ. ஆண்டு மழையளவும் உள்ள பகுதிகளில் பயிரிடப்படுகிறது.

(iv) **வளமான களிமண்** அல்லது **வண்டல் மண்** நெல் சாகுபடிக்கு ஏற்றது.

(v) நெல் பயிரிட அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

(vi) இந்தியாவில் நெல் மூன்று முறைகளில் பயிரிடப்படுகிறது.

- விதைத் தூவல் முறை
- ஏர் உழுதல் அல்லது துளையிடும் முறை
- நாற்று நடுதல் முறை.

**கோதுமை :**

(i) நெல் பயிருக்கு அடுத்தாற்போல் இரண்டாவது முக்கிய உணவுப் பயிராக விளங்குவது கோதுமை ஆகும்.

(ii) இப்பயிர் விதைக்கும் பருவத்தில் 10-15°C வெப்பமும், முதிரும் பருவத்தில் 20-25°C வெப்பநிலையும் தேவைப்படுகிறது.

(iii) சுமார் 85 சதவிகிதத்திற்கும் மேலான கோதுமை உற்பத்தி உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஆகிய ஐந்து மாநிலங்களில் கிடைக்கிறது.

(iv) இதைத் தவிர மகராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களின் கரிசல்மண் பிரதேசமும் கோதுமை உற்பத்தியில் முக்கியப் பங்கு வகுக்கிறது.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்காக**

**நெல் :**

(i) நெல் ஒரு **அயனமண்டலப் பயிர்.** 24°C சராசரி வெப்பநிலையும், 150 செ.மீ. மழை அளவும் தேவை.

(ii) **வளமான களிமண்** அல்லது **வண்டல் மண்** நெல் பயிரிட தேவை.

(iii) மூன்று முறைகளில் பயிரிடப்படுகிறது : விதைத் தூவல் முறை, ஏர் உழுதல் அல்லது துளையிடும் முறை, நாற்று நடுதல் முறை.

**கோதுமை :**

(i) விதைக்கும் பருவத்தில் 10-15°C வெப்பமும், முதிரும் பருவத்தில் 20-25°C வெப்பநிலையும் தேவைப்படுகிறது.

(ii) உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் கோதுமை பயிராகிறது.

## IX. உயர் சிந்தனை வினாக்கள்

**1. வேளாண்மை இல்லாத உலகைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா?**

வேளாண்மை இல்லாத உலகினை நம்மால் கற்பனை செய்ய முடியாது.

(i) வேளாண்மை இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

(ii) இந்தியர்களின் வாழ்விற்கும் உணவு பாதுகாப்பிற்கும் ஆதாரமாக விளங்குகிறது.

(iii) நம் நாட்டின் தேசிய வருமானத்தின் பெரும் பங்கினை வேளாண் தொழில் ஈட்டித் தருகிறது.

(iv) இந்தியாவின் மொத்த பணித்திறனில் பாதிக்கு மேல் வேளாண் தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளின் வளர்ச்சி வேளாண்மை வளர்ச்சியையே சார்ந்துள்ளன. எனவே வேளாண்மையே முக்கிய ஒன்றாக திகழ்கிறது.

**2. தென்னிந்தியாவில் நிலவும் நீர் பங்கீட்டு பிரச்சனைக்கு ஏதேனும் தீர்வை உங்களால் கொடுக்க முடியுமா?**

(i) தென்னிந்திய நதிகளை இணைத்தல்.

(ii) புதிய அணைகளை கட்டுதல்.

(iii) ஏரிகள் அனைத்தும் மழைக் காலத்தற்கு முன்பே தூர்வாறுதல்.

(iv) மழைநீர் சேமிப்பின் முக்கியத்துவத்தை மக்களிடம் பரப்புரைகள் மூலம் அறிய வைத்தல்.

(v) மரம் வளர்த்தலை ஊக்குவித்தல்.

(vi) பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் நீரின் முக்கியத்துவத்தை அறிய வைத்தல்.

## X. நிலவரைபடப் பயிற்சி.

1. வண்டல் மண் அதிகம் காணப்படும் பகுதிகளைக் குறிப்பிடுக. ※[QY-'24]
2. கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.
3. ஹிராகுட் அணை, மேட்டூர் அணை மற்றும் தாமோதர் அணைகளின் அமைவிடங்களைக் குறிக்கவும்.
4. சணல் விளையும் பகுதிகளைக் குறிக்கவும்.
5. காபி மற்றும் தேயிலை விளையும் பகுதிகள் ஏதேனும் மூன்றைக் குறிக்கவும்.
6. பாலை மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும். ※[QY-'24]
7. தூத்துக்குடி, சென்னை, கொச்சின், மும்பை மற்றும் மசூலிப்பட்டினம் மீன் பிடித்தல் மையங்களைக் கண்டறிக.
8. காவிரி மற்றும் கோதாவரி டெல்டா பகுதிகளைக் குறிக்கவும்.

## PTA மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### 1 மதிப்பெண்

**1. இந்தியாவில் அதிகம் நெல் விளையும் மாநிலம் ________ .** ※[QY-'19]

அ) பஞ்சாப் ஆ) மகாராஷ்டிரா இ) உத்தரப்பிரதேசம் ஈ) மேற்கு வங்காளம்

**விடை: ஈ) மேற்கு வங்காளம்**

**2. அமெரிக்காவிலிருந்து ________ அமைப்பு இந்தியாவில் ※HYV–ஐ அறிமுகப்படுத்தியது.** [Sep-2020]

**விடை: ஃபோர்டு**

**3. பொன் புரட்சி எந்த வேளாண் பொருள் உற்பத்தியுடன் தொடர்புடையது?** ※※ [Sep-2020; QY-'23]

அ) உருளைக் கிழங்கு ஆ) எண்ணெய் வித்துக்கள்

இ) தேன் ஈ) சணல்

**விடை: இ) தேன்**

**4. பொருத்துக.** ※[Sep-'21]

| | | | |
|---|---|---|---|
| (1) | சாம்பல் புரட்சி | (i) | முட்டை |
| (2) | வெள்ளிப் புரட்சி | (ii) | இறைச்சி |
| (3) | சிவப்புப் புரட்சி | (iii) | தோல் |
| (4) | பழுப்புப் புரட்சி | (iv) | உரங்கள் |

(அ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii) (ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)
(இ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii) (ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

**விடை: இ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)**

5. கம்பு _________ ஐ பூர்வீகமாகக் கொண்ட ஒரு பயிராகும். ※[April-'23]
அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா இ) ஐரோப்பா ஈ) அமெரிக்கா

**விடை : ஆ) ஆப்பிரிக்கா**

## 2 மதிப்பெண்கள்

**1. மண்வள பாதுகாப்பு மற்றும் மண்வள மேலாண்மையின் முறைகளை குறிப்பிடுக.** ※[PTA–3]

**மண்வள பாதுகாப்பும் மண்வள மேலாண்மையும்:**

(i) காடுகள் உருவாக்கம்
(ii) அணைகள் மற்றும் குறுக்கணைகள் கட்டுதல்
(iii) அதிக மேய்ச்சலைத் தடுத்தல்.
(iv) மேம்பட்ட பயிர்ச்சாகுபடி முறைகளைப் பின்பற்றல்.
(v) சம உயரம் உழுதல், பயிர்சுழற்சி முறை, கரைகள் கட்டுதல், படிக்கட்டு வேளாண்மை, பட்டை பயிரிடல், காற்றெதிர் திசையில் மரங்கள் நடல், நிலைத்த வேளாண் நுட்பத்தையும் மண் மேலாண்மைக்கு உகந்த பாதுகாப்பு முறைகளையும் பின்பற்றுதல்.

**2. கால்நடைகள் என்றால் என்ன?** ※[PTA–5]

(i) கால்நடைகள் இந்தியாவின் விவசாயத்தோடு ஒருங்கிணைந்த கூறுகள் ஆகும்.
(ii) கால்நடைகளின் பல்வேறு வகைப் பயன்பாடுகள் காரணமாக இவை சமூக மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றன.
(iii) ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை, அளிப்பதன் மூலம் இவை உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துகிறது.
(iv) வேளாண்மை பொய்க்கும் பொழுது வேலைவாய்ப்பையும், வருவாயையும் அளிக்கின்றன. நிலத்தை உழுவதற்கும், பயிர்களுக்கு உரம் அளிப்பவையாகவும் இவை விளங்குகின்றன.

**3. காரி்ஃப் பருவம் மற்றும் சையத் பருவம்** ※[HY-'19]

| | காரி்ஃப் பருவம் | சையத் பருவம் |
|---|---|---|
| (i) | ஜூன் முதல் செப்டம்பர் வரை | ஏப்ரல் முதல் ஜூன் வரை |
| (ii) | நெல், பருத்தி, சோளம், கம்பு, உளுந்து | காய்கறிகள், பழங்கள், திணைப்பயிர்கள் |

**4. படிக்கட்டு முறை வேளாண்மை பற்றி சிறு குறிப்பு வரைக.** ※[Sep-'21]

(i) படிக்கட்டு வேளாண்மை முறையானது **மலைப் பிரதேசங்களில்** பின்பற்றப்படுகிறது. இப்பகுதி நிலங்கள் **இயற்கையாகவே சரிவு அமைப்பை** கொண்டவை.
(ii) மலைச்சரிவுப் பகுதிகள் சமப்படுத்தப்பட்டு நிலம் நிலையான வேளாண் பகுதிகள் போலவே பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் சமமான நிலப்பகுதி குறைவாக இப்பகுதிகளில் உள்ளது.
(iii) படிக்கட்டு நிலங்கள் சிறிய சமமான நிலப்பகுதிகளாக உருவாக்கப்படுகின்றன. மலைச் சரிவுகளில் உள்ள **படிக்கட்டுமுறை** அமைப்பு **மண் அரிப்பைத்** தடுக்கிறது.

**5. இந்திய பல்நோக்குத் திட்டங்களில் எவையேனும் நான்கினை அவற்றால் பயனடையும் மாநிலங்களுடன் எழுதுக.** ※[SRT-'22]

| பல்நோக்கு திட்டத்தின் பெயர் | | பயனடையும் மாநிலங்கள் |
|---|---|---|
| i) | தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் | மேற்கு வங்காளம், ஜார்கண்ட் |
| ii) | பக்ரா நங்கல் திட்டம் | பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான் |
| iii) | ஹிராகுட் திட்டம் | ஒடிசா |
| iv) | கோசி திட்டம் | பீகார் மற்றும் நேபாளம் |

## 5 மதிப்பெண்கள்

**1. இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் ஏதேனும் ஐந்து முக்கிய சவால்களை எழுதுக.** ※※[PTA–4; May-'22]

(i) **சிறு மற்றும் குறுநில உடைமை:** இந்தியாவில் மக்கள் அடர்த்தி மிகுந்த மற்றும் தீவிரப் பயிர்சாகுபடி செய்யும் மாநிலங்களில் சிறு மற்றும் குறு நில உடமையாளர்கள் அதிகம் உள்ளனர்.

(ii) **அதிக செலவின உள்ளீடுகள் :** அதிக விலையின் காரணமாக நல்ல தரமான விதைகள் சிறு - குறு விவசாயிகளுக்கு எட்டாக் கனியாக உள்ளது.

(iii) **வளமற்ற மண் :** இந்திய மண் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வளம் கூட்டல் மற்றும் புதுப்பித்தல் செயல்பாடியின்றி வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் மண்ணின் வளம் குன்றி அதன் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.

(iv) **நீர்ப்பாசன பற்றாக்குறை :**
- இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு வேளாண் நிலப்பகுதியே பாசன வசதியை பெற்றிருக்கின்றது.
- வேளாண்மைத் தொழில் நம்பத் தகுந்ததாக மாற நீர்ப் பாசன வசதி உருவாக்கப்பட வேண்டும்.

(v) **இயந்திரமயமாக்க பற்றாக்குறை:** பெரும்பாலான பகுதிகளில் மனிதர்களைக் கொண்டு எளிய மற்றும் பழமையான கருவிகள் மூலமே வேளாண்மை செய்யப்படுகிறது.

**2. தீவிர வேளாண்மை மற்றும் வறண்ட நில வேளாண்மையின் பண்புகளை வெளிக் கொணர்க.** ※[HY-'19]

(i) **தீவிர வேளாண்மை :** தீவிர வேளாண்மை எனப்படுவது **இயந்திரங்கள்** மற்றும் **பல்வேறு நவீன யுக்திகள்** மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதாகும். சிறிய நிலத்தில் பூச்சிக் கொல்லிகள், களைக் கொல்லிகள் மற்றும் இராசயன உரங்களை அதிகமாக பயன்படுத்தி அதிக பட்ச விளைச்சலைப் பெறுவது இதன் நோக்கமாகும்.

(ii) **வறண்ட நில வேளாண்மை :** நீர்ப் பாசன வசதி இல்லாத வறண்ட பகுதிகளில் இவ்வகையான வேளாண்முறைப் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்தப் பகுதிகளில் பயிரிடப்படும் பயிர்கள் வறட்சியை தாங்கக் கூடியவை. பாசன வசதி உதவியுடன் பயிரிடப்படும் பயிர்களும் இவ்வேளாண்மையின் கீழ் பயிரிடப்படுகின்றன.

**3. இந்தியாவின் வேளாண்மையை நிர்ணயிக்கும் காரணிகளை விவரிக்கவும்.** ※[SRT-'22]

(i) **இயற்கைக் காரணிகள் :** நிலத்தோற்றம், காலநிலை மற்றும் மண்.

(ii) **அமைப்பு சார் காரணிகள் :** வேளாண் நிலத்தின் அளவு, நில உரிமை முறை மற்றும் நிலச்சீர்திருத்தங்கள்.

(iii) **உட்கட்டமைப்புக் காரணிகள் :** நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்து, வேளாண் கடன், சந்தை, காப்பீடு மற்றும் சேமிப்பு வசதிகள்.

(iv) **தொழில் நுட்பக்காரணிகள் :** அதிக விளைச்சல் தரக்கூடிய வீரிய விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் இயந்திரங்கள்.

---

**4. இடப்பெயர்வு வேளாண்மை – குறிப்பு வரைக.** ※[SRT-'22]

**இடப்பெயர்வு வேளாண்மை :**

(i) இவ்வகை வேளாண்மை பழங்குடி இன மக்களால் காடுகளில் ஒரு சிறிய பகுதியிலுள்ள மரங்களை அகற்றி சாகுபடி செய்யப்படுகிறது.

(ii) இரண்டு அல்லது மூன்றாண்டுகள் சாகுபடிக்குப் பிறகு, மண்ணின் வளம் குறைவதால் அவ்விடத்தைக் கைவிட்டு மக்கள் வேறொரு புதிய இடத்திற்குச் செல்வர்.

(iii) இவ்வாறாக இது தொடர்ச்சியாக நடைபெறும் சில உணவுபயிர்களும், காய்வகை பயிர்களும் மனித உழைப்பின் மூலம் பயிரிடப்படுகிறது.

(iv) இவை '**வெட்டுதல்**' மற்றும் '**எரித்தல்**' வேளாண்மை என்றும் அழைக்கப்படுகிறது.

---

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1.** _______ ஆம் ஆண்டு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. **விடை : 1953**

**2.** _______ பாசனம் இந்தியாவின் இரண்டாவது மற்றும் முக்கியமான நீர்ப்பாசன ஆதாரமாகும்.
**விடை : கால்வாய்**

**3.** பக்ரா நங்கல் அணை திட்டம் மூலம் பயன்பெறும் மாநிலங்கள் _______.
**விடை : பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான்**

**4.** _______ வேளாண்மை பழங்குடி இன மக்களால் காடுகளில் ஒரு சிறிய பகுதியிலுள்ள மரங்களை அகற்றி சாகுபடி செய்யப்படுகிறது. **விடை : இடப்பெயர்வு**

**5.** காபி அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம் _______ **விடை: கர்நாடகா**

**6.** வெளிர்நிறமுடைய மணற்பாங்கான வண்டல்மண் _______ எனப்படும். **விடை : காதர்**

**7.** ஈரப்பதத்தை நீண்டநேரம் தக்கவைத்துக் கொள்ளும் மண் _____ ஆகும். **விடை : கரிசல் மண்**

**8.** _______ என்பது வேளாண் பயிர்களுக்கு செயற்கை முறையில் நீரைக் கொண்டு செல்லுதலாகும்.
**விடை : நீர்ப்பாசனம்**

**9.** இந்தியாவின் மொத்த பாசனப்பரப்பில் கிணற்றுப் பாசனம் _______ சதவீதம் கொண்டது.
**விடை : 62%**

**10.** நாட்டின் மிகமலிவான, நம்பகமான நீர்ப்பாசனம் _______. **விடை : கிணற்றுப் பாசனம்**

**11.** இந்தியாவின் மிகப்பழமையான பாசனமுறை _______. **விடை : ஏரிப்பாசனம்**

**12.** _______ மற்றும் _______ பயிர்கள் தெளிப்புப் பாசனம் மூலம் பயன்படுத்தப்படுகின்றன.
**விடை : கரும்பு, சோளம்]**

**13.** நாட்டின் மொத்த வருமானத்தில் 25% _______ மூலம் கிடைக்கிறது. **விடை : வேளாண்மை**

**14.** இயந்திரம் மற்றும் நவீன யுக்திகளால் உற்பத்தியை அதிகப்படுத்துவது _______ வேளாண்மை.
**விடை : தீவிர**

**15.** மலைப் பிரதேசங்களில் பின்பற்றப்படும் வேளாண்முறை _______.
**விடை : படிக்கட்டுமுறை வேளாண்மை**

16. உணவுப் பயிர்கள் என்பது _______ மற்றும் _____. **விடை : கோதுமை, மக்காச் சோளம்**

17. புகையிலை, சணல் போன்றவை _______. **விடை : வாணிபப் பயிர்கள்]**

18. தேயிலை, இரப்பர் போன்றவை _______. **விடை : தோட்டப்பயிர்கள்**

19. இந்தியாவின் பூர்வீகப்பயிர் _______ ஆகும். **விடை : நெல்**

20. இந்தியாவில் நெல் _______ முறைகளில் பயிரிடப்படுகிறது. **விடை : 3**

21. _______ ஏழை மக்களின் முக்கிய உணவுப் பயிராகும். **விடை : கம்பு**

22. இந்தியாவில் கரும்பின் முதன்மை உற்பத்தியாளர் ______. **விடை : உத்திரப்பிரதேசம்**

23. _______ பூகி தேயிலையின் பிறப்பிடம். **விடை : சீனா**

24. _______ அசாமிகா தேயிலையின் பிறப்பிடம். **விடை : இந்தியா**

25. இந்தியாவில் இரப்பர் தோட்டம் முதன்முதலில் _______ ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. **விடை : 1902**

26. உள்நாட்டு மீன்பிடித்தலில் _______ மாநிலம் முதலிடம் வகிக்கிறது. **விடை : ஆந்திரா**

27. உலகின் பெரிய புவி ஈர்ப்பு அணை _______ . **விடை : பக்ராநங்கல் அணை**

28. _______ அணை உலகின் மிக நீளமான அணை ஆகும். **விடை : ஹிராகுட்**

29. _______ பீகாரின் துயரம் என அழைக்கப்படுகிறது. **விடை : கோசி ஆறு**

30. உணவு உற்பத்திக்கான புரட்சி _______. **விடை : பசுமைப்புரட்சி**

## II. வேறுபடுத்துக.

**1.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பொன் புரட்சி | அ) | உருளைக் கிழங்கு |
| 2. | பழுப்பு புரட்சி | ஆ) | வெங்காயம் உற்பத்தி |
| 3. | சாம்பல் புரட்சி | இ) | தோல், கோக்கோ |
| 4. | இளம் சிவப்பு புரட்சி | ஈ) | பழங்கள், தேன் |
| 5. | வட்டப் புரட்சி | உ) | உரங்கள் |

**விடை : 1 - ஈ, 2 - இ, 3 - உ, 4 -ஆ, 5 -அ.**

**2.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மஞ்சள் புரட்சி | அ) | சணல் உற்பத்தி |
| 2. | நீலப் புரட்சி | ஆ) | முட்டை மற்றும் கோழிகள் |
| 3. | தங்க நூலிழைப் புரட்சி | இ) | பால் உற்பத்தி |
| 4. | வெண்மைப் புரட்சி | ஈ) | மீன்கள் உற்பத்தி |
| 5. | வெள்ளிப் புரட்சி | உ) | எண்ணெய் வித்துகள் |

**விடை : 1 - உ, 2 - ஈ, 3 - அ, 4 - இ, 5 - ஆ**

## III. சுருக்கமாக விடையளி. 2 மதிப்பெண்கள்

**1. இந்தியாவில் பயிரிடப்படும் முக்கியப் பயிர்களை வகைப்படுத்துக.**

(i) **உணவுப்பயிர்கள் :** நெல், கோதுமை, மக்காச்சோளம், தினைப் பயிர்கள், பருப்பு இன்னும் பிற.

(ii) **வாணிபப் பயிர்கள் :** கரும்பு, புகையிலை, பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள்.

(iii) **தோட்டப்பயிர்கள் :** காபி, தேயிலை, ரப்பர்

(iv) **தோட்டக்கலைப் பயிர்கள் :** பழங்கள், காய்கறிகள், மலர்கள்

**2. சணலின் பயன்களைக் கூறு.**

கோணிப்பைகள், கம்பளங்கள், கயிறு, நூலிழைகள், போர்வைகள், துணிகள், தார்பாலின், திரைச் சீலைகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றது.

**3. இந்தியாவில் பயிரிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை? அவற்றின் பயன்களைக் கூறுக.**

(i) மிளகு, மிளகாய், மஞ்சள், இஞ்சி, ஏலக்காய், இலவங்கம், பட்டை மற்றும் பாக்கு ஆகியவை இந்தியாவில் முக்கிய நறுமணப் பொருட்கள் ஆகும்.

(ii) இந்நறுமணப் பொருள்கள் உணவுக்கு சுவையூட்டியாகவும், மருந்துப் பொருட்களாகவும் மற்றும் சாயங்கள் செய்யவும் பயன்படுகிறது.

## IV. வேறுபடுத்துக. 2 மதிப்பெண்கள்

**1. தேயிலை மற்றும் காபி.**

| வ. எண் | தேயிலை | காபி |
|---|---|---|
| (i) | தேயிலை அயனமண்டல மற்றும் உப அயனமண்டல காலநிலைகளில் வளரும் ஒரு பசுமையான தாவரமாகும். | இவை நிழல்களில் நன்றாக வளரக்கூடியது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000மீ, 1500மீ உயரம் கொண்ட மலைச் சரிவுகளில் நன்றாக வளர்கிறது. |
| (ii) | உலகத் தேயிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் இருக்கிறது. | உலக காபி உற்பத்தியில் இந்தியா 7வது இடத்தில் இருக்கிறது. |
| (iii) | தமிழ்நாடு, கேரளா மற்றும் மேற்கு வங்காளம் தேயிலை பயிரிடும் மற்ற மாநிலங்களாகும். | இந்தியாவில் காபி உற்பத்தியில் கர்நாடகம் முதன்மையான உற்பத்தியாளராக திகழ்கிறது. |

**2. திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறு.**

| வ. எண் | திறந்தவெளிக் கிணறுகள் | ஆழ்துளைக் கிணறுகள் |
|---|---|---|
| (i) | நிலத்தடி நீர் போதுமான அளவிற்கு இருக்கக் கூடிய பகுதிகளில் இவ்வகைப் பாசனம் காணப்படுகிறது. | ஆழ்துளைக் கிணற்று பாசனம் நிலத்தடி நீர் மட்டம் குறைவாக உள்ள பகுதிகள் மின் மிகை பகுதிகள் மற்றும் மென் பாறைகள் கொண்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிறது. |
| (ii) | இப்பாசனம் கங்கை சமவெளி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, நர்மதை மற்றும் தபதி ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் அதிகம் காணப்படுகிறது. | குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், மத்தியப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இப்பாசனம் அதிக அளவில் காணப்படுகிறது. |

**VI. விரிவாக விடையளி. 5 மதிப்பெண்கள்**

**1. நவீன நீர்ப்பாசன முறை பற்றி விரிவாக எழுதுக.**

இந்தியாவில் பல நவீன **நீர்ப்பாசன** முறைகள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றில் முதன்மையானவை **சொட்டு நீர்ப்பாசனம்,** வேகத் தெளிப்பு நீர்ப்பாசனம் மற்றும் மையத் தெளிப்பு நீர்ப்பாசனம் ஆகிவையாகும்.

**சொட்டு நீர்ப்பாசனம் :**

(i) இம்முறையில் நீரானது குழாய்களில் உள்ள துவாரங்கள் வழியாக நீர்த் துளிகளாகப் பயிர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

(ii) இந்நீர்ப்பாசனத்தின் மூலம் சுமார் 70 சதவிகித நீர் சேமிக்கப்படுகின்றது.

**தெளிப்பு நீர்ப்பாசனம் :**

(i) இம்முறையில் குழாயில் போடப்பட்டுள்ள நுண் துளைகள் வழியாக பயிர்களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது.

(ii) இவ்வகை பாசனத்தை சமனற்ற நிலப்பகுதிகளிலும் பயன்படுத்தலாம்.

**வேகத்தெளிப்பு நீர்ப்பாசனம் :**

(i) இவ்வகை நீர்பாசனத்தில் நீரானது குறுகிய குழாய் மூலமாக வேகமாக செலுத்தப்படுகிறது.

(ii) 4 மீட்டர் உயரம் வரை உள்ள பயிர்களுக்கும் இவற்றின் மூலம் நீர்ப்பாசனம் செய்யலாம்.

**மையத்தெளிப்பு நீர்ப்பாசனம் :**

இவற்றிற்கான உபகரணத்தின் மையப்பகுதியில் உள்ள கருவி சுழன்று அவற்றைச் சுற்றியுள்ள பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தை அளிக்கிறது.

# அலகுத் தேர்வு

**காலம் : 60 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (4 × 1 = 4)**

**1. கரிசல் மண் ______ எனவும் அழைக்கப்படுகிறது.**

அ) வறண்ட மண் ஆ) உவர் மண் இ) மலை மண் ஈ) பருத்தி மண்

**2. எந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள மண் வகைகளை 8 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது.**

அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்

ஆ) இந்திய வானியல் துறை

இ) இந்திய மண் அறிவியல் நிறுவனம்

ஈ) இந்திய மண் ஆய்வு நிறுவனம்

**3. இந்தியாவில் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது _____**

அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை

**4. உலகிலேயே மிக நீளமான அணை _____**

அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை

இ) ஹிராகுட் அணை ஈ) பக்ரா நங்கல் அணை

**II. சரியான கூற்றைக் கண்டுபிடிக்கவும்.** (2 × 1 = 2)

**5.** கூற்று (1) : **பழங்கள் காய்வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலைத் துறையாகும்.**

காரணம் (2) : **உலகளவில் இந்தியா மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.**

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி காரணம் தவறு. ஈ) கூற்று தவறு காரணம் சரி.

**6.** கூற்று : **வண்டல் மண் ஆறுகளின் மூலம் அரிக்கப்பட்டு படியவைக்கப்பட்ட, மக்கிய பொருட்களால் ஆன ஒன்று.**

காரணம் : **நெல் மற்றும் கோதுமை வண்டல் மண்ணில் நன்கு வளரும்.**

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு காரணம் சரி.

**IV. பொருத்துக.** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| **7.** | இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் | - அ) | மகாநதி |
| **8.** | காபி | - ஆ) | இந்தியாவின் உயரமான அணை |
| **9.** | டெகிரி அணை | - இ) | உத்தரப்பிரதேசம் மற்றும் பீகார் |
| **10.** | ஹிராகுட் | - ஈ) | கர்நாடகா |

**V. சுருக்கமாக விடையளி.** (2 × 2 = 4)

**13.** கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.

**14.** இந்தியாவின் மீன்வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி எழுதுக,

**VI. காரணம் கண்டறிக.** (2 × 2 = 4)

**15.** மழைநீர் சேமிப்பு அவசியம்

**16.** வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு

**VII. விரிவான விடையளிக்கவும்.** (1 × 5 = 5)

**17.** இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தைக் குறிப்பிட்டு மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.